பக்கங்கள்:-பத்து

Registered as a News paper in Sri Lanka

விலை ரூபா. 6.00

துரித தபால், பொதிகள் சேவை
உள்ளூர் வெளிநாடுகளுக்கான
சகல தபால்;பார்சல்கள் எதுவானாலும்
உடனுக்குடன் அனுப்புவதற்கு
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
Computer Systems
303, K.K.S. ROAD, JAFFNA
T.P : 021-222 2670
FAX: 222 3214
Email-del-smskr@eureka.lk


# வலம்புரி

Valampuri

சங்கு 04 வள்ளுவர் ஆண்டு 2034 ஆவணி 20 சனிக்கிழமை (06.09.2003) தொலைபேசி - 2223378 ஒலி 261

# சமாதான முயற்சி குலைந்தால் மீண்டுமோர் யுத்தம் வெடிக்கும்

## பிரதமர் ரணில் உரை

(நமது நிருபர்)

**அரசு தற்போது எடுத்து வரும் சமாதான நடவடிக்கைகள் சீர்குலைந்து போய் மீண்டும் யுத்தம் ஒன்று ஏற்பட்டால் அபிவிருத்தி நடவடிக்கைகள் முற்றாக ஸ்தம்பிதம் அடைந்து விடுமென பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா எச்சரிக்கை செய்துள்ளார்.**

மொனறாக்லை பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்திப பணிகளைப் பார்வையிடச் சென்ற பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா அங்கு நடைபெற்ற கூட்டம் ஒன்றில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்;

தற்போது நாட்டில் யுத்த நிறுத்தம் அமுல் செய்யப்பட்டு வருவதால் கூடியளவு அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்வதற்கு அரசாங்கத்தினால் முடிந்துள்ளது. கொடிய யுத்தத்திற்கு ஏற்படும் பாரிய செலவீனங்களைக் கட்டுப்படுத்தி மக்கள் சுதந்திரமாக நடமாடக் கூடிய வகையில் யுத்த நிறுத்தத்தை கடைப்பிடித்து இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வை நோக்கி அரசு சென்று கொண்டிருக்கிறது.



விடுதலைப் புலிகளுடன் யுத்த நிறுத்த உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்ட பின் ஆறு சுற்று சமாதானப் பேச்சுவார்த்தைகள் சீரான முறையில் நடைபெற்றுள்ளன. அவர்கள் கோரிய இடைக்கால நிர்வாக சபை கட்டமைப்பை வழங்குவதில் ஏற்பட்டுள்ள காலதாமதங்களினால்

(10ம் பக்கம் பார்க்க)

## அமெ. அமைதி காக்கும் குழு கொழும்புக்கு வருகிறது!

(கொழும்பு)

அமெரிக்காவைச் சேர்ந்த அமைதி காக்கும் குழுவின் அடுத்த வாரம் கொழும்பு வரவுள்ளனர்.

ஐரோப்பிய பிராந்திய நடவடிக்கைகளுக்குத் தலைமைதாங்கும் டாக்டர் றொபேட் றோய் தலைமையில் வரவிருக்கும் இக் குழுவினர் எதிர்காலத்தில் தமது நடவடிக்கைகளை இலங்கையில் விஸ்தரிப்பது தொடர்பாகவும் தற்போதைய நிலைமைகளை ஆராயவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு வரவுள்ள இவ் அமைதி காக்கும் குழுவினர், சிரேஷ்ட அரச அதிகாரிகள் மற்றும் தொண்டர் ஸ்தாபனங்களின் பிரதிநிதிகளுடன் இணைந்து அரசியல், பாதுகாப்பு சுற்றுச் சூழல் பற்றிய ஆய்வுகளை மேற்கொள்ளவுள்ளதுடன் முக்கியமான இடங்களையும் பார்வையிடவுள்ளனர்.

(வ)





## மட்டக்களப்பில் நேற்று துக்கதினம் அனுஷ்டிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவத்தினராலும் ஊர்காவற் படையினராலும் படுகொலை செய்யப்பட்ட தமிழ் மக்களை நினைவு கூரும் வகையில் நேற்று மட்டக்களப்பில் துக்க தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

கடந்த கால யுத்த சூழ்நிலையில் கொல்லப்பட்ட தமிழர்களை நினைவு கொள்ளும் வகையில் செப்ரெம்பர் 5ம் திகதி தமிழ் இனப்படுகொலை தினமாக மட்டக்களப்பு மாவட்ட மக்கள் பெருமன்றம் பிரகடனப்படுத்தியிருந்தது. நேற்றுக் காலை மட்டக்களப்பில் ஆலயங்களில்

(10ம் பக்கம் பார்க்க)

## வேம்படி மகளிர் கல்லூரியில் நடந்த பயிற்சிக் கருத்தரங்கில் புலிக்கொடி ஏற்றப்பட்டது

### படையினர் சீற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரியில் நேற்று நடைபெற்ற ஆசிரியர் பயிற்சிக் கருத்தரங்கு நிகழ்வில் புலிக்கொடி ஏற்றப்பட்ட மையினால் பெரும் சர்ச்சை உருவாகியது.

கல்வித் திணைக்களமும், தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவையும் இணைந்து சமூகக்கல்வி வரலாறு கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான பயிற்சிக் கருத்தரங்கொன்றை நடாத்தியது.

இந் நிகழ்வின் ஆரம்பத்தில் புலிக்கொடி ஏற்றப்பட்டது. இதனை அடுத்து கல்லூரிக்கு விரைந்து வந்த யாழ்.படைத்தரப்பினர் புலிக் கொடி ஏற்றப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அதனை இறக்குமாறு வற்புத்தினர்.

இதற்கு நிகழ்வின் ஏற்பாட்டா

(10ம் பக்கம் பார்க்க)

## தெல்லிப்பளையில் கட்டிய வீட்டை தகர்க்க படையினர் பணிப்பு

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளை பன்னாலைப் பகுதியில் புதிதாக அமைக்கப்பட்ட வீடொன்றினை தகர்க்குமாறு படையினர் அச்சுறுத்தியிருப்பதாக மனித உரிமை அமைப்புக்கள் யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளன.

அதியுயர் பாதுகாப்பு வலயத்துக்கு வெளியே சுமார் இரண்டு இலட்சம் ரூபா செலவில் புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு பின்னர் இவ் வீடு அமைக்கப்பட்டுள்ள போதிலும் அதியுயர் பாதுகாப்பு வலயத்துக்குள் இவ் வீடு அமைக்கப்பட்டிருப்பதால் அதனைத் தகர்க்குமாறு படையினர் உத்தரவிட்டிருப்பதாக முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ யாழ். குடாநாட்டுக்கு முன்னர் விஜயம் செய்திருந்த போது பன்னாலைப் பகுதியில் மக்கள் மீளக்குடியமரலாம் என்று குறிப்பிட்டதாகவும், அதன் அடிப்படையிலேயே அங்கு வீடு அமைக்கப்பட்டதாகவும் முறைப்பாட்டில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

(இ)

## பாதுகாப்பு நிலையங்களுக்கு புலிகளால் அச்சுறுத்தலாம்!

### எச்சரிக்கிறார் சரத் அமுனுகம

(கொழும்பு)

திருகோணமலைத் துறைமுகம், விமான நிலையம் மற்றும் படைத் தளங்களுக்கு விடுதலைப் புலிகளால் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக பொது ஜன ஐக்கிய முன்னணியின் ஊடகப் பேச்சாளர் சரத் அமுனுகம எச்சரித்துள்ளார்.

நேற்றையதினம் எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு எச்சரித்துள்ளார். அச் செய்தியாளர் மாநாட்டில்

அவர் மேலும் தெரிவிக்கையில்;

புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு எதிராக ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளை விடுதலைப் புலிகள் மேற்கொண்டு வருகின்றனர். இது சமாதான முயற்சியை மறைமுகமாக எதிர்க்கும் போக்கையை காட்டுகிறது.அரசாங்கமும் யுத்த நிறுத்தக் கணகாணிப்புக்குழுவும் இந்த நிலைமையை மாற்றியமைப்பதற்குத் தவறியுள்ளனர்.

அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இதுவரை விடுதலைப் புலிகள் 13 முகாம்களை அமைத்துள்ளனர். இது நாட்டின் இறைமைக்குப் பெரும் அசசறுத்தலாக அமைந்துள்ளது.

இந்த நிலைமை தொடர்ந்து கொண்டு செல்வதால் ஐக்கிய

(10ம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக்குழு-புலிகள் திருமலையில் சந்திப்பு

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்ட யுத்த நிறுத்த கண்காணிப்புக்குழு தலைவருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளின் திருமலைமாவட்ட அரசியல் துறை பொறுப்பாளர் திலக்கிற்கும் இடையே நேற்றுக் காலை 10 மணியளவில் சந்திப்பு ஒன்று இடம் பெற்றுள்ளது.


இச் சந்திப்பில் நேற்று முன் தினம் புலிகளின் குரங்குபாஞ்சான் முகாமைப் பார்வையிடச் சென்ற யுத்த நிறுத்த கண்காணிப்புக்குழுவினரை அங்கு செல்வதற்கு புலிகள் அனுமதிக்காமை குறித்து ஆராயப்பட்டது.

கடந்த வாரம் திருகோணமலை மாவட்ட தளபதி கேணல் பதுமனுக்கும் திருகோணமலை மாவட்ட யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவருக்குமிடையே நடைபெற்ற சந்திப்பில் கண்காணிப்புக் குழுவினர் இம் முகாமை தினமும் பார்வையிடுவதற்கு இணக்கம் காணப்பட்டிருந்தது.

ஆனால் முகாமை பார்வையிடுவதற்கு புலிகள் அனுமதிக்கவில்லை. எனத் தெரிவிக்கப்படுகிறது. கண்காணிப்புக் குழுப் பிரதிநிதிகள் அங்கு இவ் விடயம் குறித்து வினா எழுப்பியிருந்தனர். இதன் போது விடுதலைப் புலிகளின் திருகோணமலைத் தளபதியை தான் சந்திக்க

(10ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்



# இலஞ்ச ஊழல் ஒழிப்பில் பொது மக்களின் உதவி

(கொழும்பு)

நாட்டில் இடம்பெற்று வரும் இலஞ்ச ஊழலை ஒழிக்கும் வகையில், அவைபற்றிய தகவல்களைத் தந்துதவுமாறு இலஞ்ச ஊழல் பற்றிய புகார்களை புலனாய்வு செய்யும் ஆணைக்குழு பொது மக்களிடம் கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

பொதுமகன் ஒருவர் இலஞ்சத்தைக் கேட்டாலோ அல்லது பிறருக்கு கொடுக்க நேர்ந்தாலோ அன்றி ஒருவர் தனது வருமானத்தைவிட கூடியளவு சொத்துக்கள், காணி, பணம் மற்றும் வாகனம் உள்ளிட்ட பல்வேறு வகை வருமானத்தைக் கொண்டிருந்தாலோ தமக்கு உடனடியாக அதுபற்றி தகவல் தெரிவிக்குமாறு மேற்படி அணைக்குழு மக்களைக் கேட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

அத்துடன், இதுபற்றித் தகவல் தெரிந்தவர்கள் இலஞ்ச ஊழல் புலனாய்வு ஆணைக்குழு அலுவலகத்தின் 2586841, 2596362, 2584872, 2586267 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ள அதே நேரம் தகவல் தருபவர்களின் பெயர் விபரங்கள் வெளிப்படுத்தப்படாமல் பாதுகாக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ-18)



## கட்டுநாயக்கா விமானநிலைய கருமபீட அதிகாரிகளைக் கண்காணிக்க விசேட பிரிவு

((கொழும்பு )

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலைய கரும பீடங்களில் பணியாற்றும் அதிகாரிகளைக் கண்காணிப்பதற்காக குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் விசேட கண்காணிப்புப் பிரிவை நியமித்துள்ளது.

உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் ஜோன் அமரதுங்காவின் பணிப்புரைக்கு அமைய இப் பிரிவு அமைக்கப்பட்டுள்ளது.

விமான நிலைய குடிவரவு குடியகல்வு திணைக்களக் கரும பீடங்களில் அதிகாரிகள் இருப்பதில்லை என பயணிகள் தெரிவித்த முறைப்பாட்டை அடுத்தே இந் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

தமது கடமைகளை சரியாக நிறைவேற்றாத அதிகாரிகளுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்குமாறு உள்துறை அமைச்சின் செயலாளர் எம்.என்.யுனைட பணிப்புரை விடுத்துள்ளார்.

(தி)

## ச.ச.நிலையத்திற்கு நூல்கள் கொள்வனவு

(சுன்னாகம்)

அரசின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்ட நிதியிலிருந்து வலிகாமம் தெற்கு சாந்தி சனசமூக நிலையத்திற்கு 25ஆயிரம் ரூபா பெறுமதியான நூல்கள் வழங்கப்பட்டுள்ளன.

(உ-104)

## நிர்வாக சபை தெரிவு

(செம்பியன்பற்று)

மாமுனைக் கிராம அபிவிருத்திச் சங்க நிர்வாக சபை அண்மையில் தெரிவு செய்யப்பட்டது.

தலைவராக த.நாகேஸ்வரன், செயலாளராக கி.அம்பிக்குமார், பொருளாளராக கி.புண்ணியமூர்த்தி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

(உ-42)



## ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தி. இரு போட்டிகளில் வெற்றி

(கந்தரோடை)

உடுவில் கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையே ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றுவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் நேற்று முன்தினம் இடம் பெற்ற ஆட்டத்தில்,

14வயதுப் பிரிவில் குப்பிளான் விக்னேஸ்வரா வித்தியாலயத்தை எதிர்த்து விளையாடிய ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாசாலை 3:2 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது.

அதேவயதுப் பிரிவில் இணுவில் மத்திய கல்லூரியை எதிர்த்து விளையாடிய கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி 3:0 என்ற கோல்கணக்கில் வெற்றியீட்டியது.

அத்துடன், 16வயதுப் பிரிவில் கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாசாலையை எதிர்த்து விளையாடிய ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாசாலை 3:0 என்ற கோல் கணக்கில் பெற்று வெற்றியை தனதாக்கிக் கொண்டது.

(உ-103)

## சமாதானக் கலந்துரையாடல்

(கொழும்பு)

தமிழ் முஸ்லிம் இனங்களுக்கிடையே நல்லுறவை ஏற்படுத்தும் வகையில் சமாதானக் கலந்துரையாடல் ஒன்று இன்று அட்டாளைச் சேனையில் உள்ள சீட்ஸ் பவுண்டேசன் அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் சமய, சமூகத் தலைவர்கள், அரச திணைக்களங்களில் பணிபுரியும் உயர்மட்ட அதிகாரிகள் உட்படத் தமிழ் முஸ்லிம இளைஞர் யுவதிகளும் கலந்து கொள்ளவுள்ளனர்.

(உ-8)



## மாவட்டச் செயலர் நியமனத்திற்கு எதிராக நீதிமன்றில் மனுத்தாக்கல்

(கொழும்பு)

மாவட்டச் செயலாளர்கள் 5 பேரின் நியமனத்திற்கு எதிராக உயர் நீதிமன்றில் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அண்மையில் திருகோணமலை, பொலநறுவ, அம்பாறை, குருநாகல், அனுராதபுரம் ஆகிய ஐந்து மாவட்டங்களுக்கான அரசாங்க அதிபர்கள் நியமிக்கப்பட்டனர்.

இந் நியமனங்களை ஆட்சேபித்து கந்தளாய் பிரதேச செயலாளர் எஸ்.பி. பிஜதாஸ மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

இம் மனுவில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் அமைச்சர்கள், சட்டமா அதிபர் ஆகியோர் பிரதிவர்திகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

மாவட்டச் செயலாளர்களாக நியமிக்கப்பட்ட ஐவரும், என்னுடன் நேர்முகப் பரீட்சைக்கு தோற்றினர். ஆனால் என்னைவிட தகைமை குறைந்தவர்களாகவும், சேவை, மூப்பு அனுபவம் இல்லாதவர்களாகவும் இருக்கும் இந்த 5பேருமே மாவட்டச் செயலாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

(தி)

## பதிவை உறுதி செய்க

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்திவரும் வருடாந்த கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி எதிர்வரும் 20 ஆம் திகதி நடைபெறவுள்ளதால், பதிவு செய்த கழகங்களை தங்கள் பதிவுகளை எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன் உறுதிப்படுத்துமாறு கேட்கப்பட்டுள்ளது.

(உ)



நேற்றைய தினம் யாழ் குடாநாட்டிற்கு விஜயம் மேற்கொண்டிருந்த பிரிட்டன் பழமைவாதக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரும், பிரதித் தலைவருமான மைக்கல் அங்க்றம் தலைமையிலான குழுவினர் யாழ் செயலகத்தில் அரச அதிபர் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதி நிதிகளைச் சந்தித்த போது எடுக்கப்பட்ட படங்கள்.

படங்கள்: பவன்

## அதிபர் வெற்றிடங்களை தகுதியின் அடிப்படையில் நியமிக்கப் பணிப்பு

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மாகாண அரசாங்கப் பாடசாலைகளில் அதிபர் வெற்றிடங்கள் நிலவும் போது, பொருத்தமானவர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரி நேர்முகப் பரீட்சையின் அடிப்படையில் புதிய அதிபர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்குமாறு மாகாணக் கல்வி அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் எம்.கே.எம். ஹனீபா சகல வலயக் கல்விப்பணிப்பாளர்களுக்கும் பணிப்புரை விடுத்துள்ளார்.

அதிபர் நியமனங்களை வழங்கும் போது மாகாணக் கல்விப் பணிப்பாளரூடாக கல்வி அமைச்சின் செயலாளரின் அனுமதி பெறப்பட வேண்டும் எனவும் அவர் அறிவித்துள்ளார்.

பாடசாலைகளில் அதிபர் வெற்றிடங்கள் நிலவும் போது வலயக் கல்விப் பணிப்பாளர் உரிய நடைமுறைகளைப் பின்பற்றாது புதிய அதிபர்களை நியமிப்பதனால் தகுதியானவர்கள் பாதிக்கப்படுவதாக மாகாணக் கல்வியமைச்சுக்கு கிடைத்த முறைப்பாடுகளை அடுத்தே இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(தி)

## நிதி ஒதுக்கீடு

(சுன்னாகம்)

அரசின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியிலிருந்து வலிகாமம் தெற்கில் உள்ள இருபது முன்பள்ளிகளுக்கு கற்பித்தல் உபகரணங்களை வழங்குவதற்கென 97ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கிடப்பட்டுள்ளது.

(உ-104)

## சண்டிலிப்பாய் பாடசாலை சாதனை

(கந்தரோடை)

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் 19 வயதுப் பிரிவினைச் சேர்ந்த வலைபந்தாட்ட அணி, யாழ். மாவட்டத்திலும், வடக்கு கிழக்கு மாகாண மட்டத்திலும் முதலாம் இடத்தினைப் பெற்று அகில இலங்கை ரீதியில் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

இன்று முதல் எதிர்வரும் 8 ஆம் திகதி வரை. வியாங்கொடை தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெறவுள்ள தேசிய மட்டப் போட்டிகளில் இவ்வணி கலந்து கொள்ளவிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

(உ-103)

## பல்கலை அனுமதி விண்ணப்ப படிவம்

(யாழ்ப்பாணம்)

2003-2004 கல்வியாண்டிற்கான பல்கலைக்கழக அனுமதி விண்ணப்ப படிவம் நாளை முதல் பூபாலசிங்கம் புத்தகசாலையில் விற்பனை செய்யப்படவுள்ளது.

(தி)

## வடக்கு - கிழக்கு மாகாணம்

# கேள்வி அறிவித்தல்

## நிர்மாண வேலை

1. நிர்மாணப் பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தில் (ICTAD) கட்டடம் நிர்மாணிப்பதற்கு தரம் எம்-8 இலும் அல்லது அதற்கு மேல் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தகாரர்களிடமிருந்து அமைச்சுக் கேள்விச் சபைத் தலைவரினால் கீழே குறிப்பிடப்பட்ட அட்டவணையில் காட்டப்பட்ட வேலைக்கு மூடிய கேள்விகள் கோரப்படுகின்றன.

2. மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 750/ஐ காசாக யாழ்ப்பாணம் கடற்கரை வீதியில் உள்ள மாகாணக் கட்டடங்கள் திணைக்கள பிரதம எந்திரி அலுவலகத்தில் செலுத்திப் பெற்றுக்கொள்ளப்பட்ட பொது 172 பற்றுச்சீட்டை யாழ்ப்பாணம் கடற்கரை வீதியில் உள்ள மாகாணக் கட்டடங்கள் திணைக்கள நிறைவேற்று எந்திரி அலுவலகத்தில் சமர்ப்பிக்குமிடத்து 2003 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 29 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிவரை அலுவலக நேரங்களில் கேள்விப்பத்திரங்களை (இரு பிரதிகளில்) பெற்றுக்கொள்ளலாம்.

3. ஒப்பந்தப் பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னர் நிர்மாணப் பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தினால் வழங்கப்பட்டதும், இற்றைவரை செய்யப்பட்ட வேலைகளின் விபரங்கள் அடங்கியதுமான பதிவுப் புத்தகத்தினை சமர்ப்பித்தல் வேண்டும்.

4. கேள்வி கோருபவர் ஒருவரிற்கு ஒரு தொகுதி ஆவணங்கள் மட்டும் விநியோகிக்கப்படும். அத்துடன் தகுதியான கேள்விதாரர்கள் கேள்விப் பத்திரங்களை இலவசமாகப் பார்வையிடுவதோடு, மேலதிக விபரங்களையும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் காட்டப்பட்ட முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.

5. சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் திறக்கப்படும் தினத்தில் இருந்து 90 நாட்களுக்குச் செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும். அத்துடன், செயலாளர், புனர்வாழ்வு புனரமைப்பு, சமூக நலத்துறைக் கட்டடங்கள், மகளிர் விவகார அமைச்சு, வடக்கு - கிழக்கு மாகாணம், திருகோணமலை என்ற பெயரில் எடுக்கப்பட்ட கேள்விப் பிணையும் கேள்விகளுடன் இணைக்கப்பட்டு தலைவர், கேள்விச்சபை, புனர்வாழ்வு, புனரமைப்பு, சமூக நலத்துறை, கட்டடங்கள், மகளிர் விவகார அமைச்சு, வடக்கு - கிழக்கு மாகாணம், உட்துறைமுக வீதி, திருகோணமலை என்ற முகவரிக்கு 2003ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம், 30 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னதாக ஒப்படைக்கப்படல் வேண்டும். பெறப்பட்ட கேள்விகள் உடனடியாகத் திறக்கப்படும்.

6. வேறு விபரங்கள் தேவைப்படின் கேள்வி ஆவணங்களில் பார்வையிடலாம்.

### அட்டவணை

| வேலை விபரம் | கேள்விப்பிணை ரூபா | நிறைவேற்று எந்திரியின் முகவரி |
|---|---|---|
| அரச சிறுவர் இல்லம் நிர்மாணித்தல்; கைதடி (மிகுதி வேலைகள்) கட்டம் (III) | 30,000/- | நிறைவேற்று எந்திரி அலுவலகம், மாகாண கட்டடங்கள் திணைக்களம், கடற்கரை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி இல. 026 - 222 2634 |

புனர்வாழ்வு, புனரமைப்பு, சமூக நலத்துறை,
கட்டடங்கள், மகளிர் விவகார அமைச்சு,
வடக்கு – கிழக்கு மாகாணம், உட்துறைமுக வீதி,
திருகோணமலை.

தலைவர்,
அமைச்சுக் கேள்விச் சபை.

01. 09. 2003 (C/6621)

## ஆலயம் மீளமைப்பு

(செம்பியன்பற்று)

கடந்த 2000 ஆம் ஆண்டில் இடம்பெற்ற யுத்தத்தினால் முற்றாகச் சேதமான மாமுனைக் கடற்கரை நாகதம்பிரான் ஆலயத்தை மீளமைப்புச் செய்யும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (உ-42)

## மிதிவெடி அகற்றல்

(கல்வயல்)

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள சங்கத்தானை, பெருங்குளம் கச்சாய் ஆகிய பகுதிகளில 'ஹலோ ட்ரஸ்ட்' நிறுவனம் தற்போது மிதிவெடி அகற்றும் பணியை மேற்கொண்டு வருகின்றது. (உ-36)

## திருத்தம்

### கேள்வி அறிவித்தல்

### மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்

05.09.2003 ஆம் திகதிய வலம்புரிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட "கல்வியங்காடு பொதுச்சந்தை புனரமைத்தல்" எனும் விளம்பரத்தில் பந்தி 6 இல் கேள்வி ஆவணத் தொகுதிகளை (இணைப் பிரதிகளில்) யாழ்ப்பாணம் புனர்வாழ்வு, புனரமைப்புச் செயலகத்தில் எல்லா அலுவலக நாள்களிலும், அலுவலக நேரங்களிலும் இலவசமாகப் பார்வையிடலாம் என்றுள்ளதை பின்வருமாறு மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

"கேள்வி விண்ணப்ப (ஆவணம்) இணைப்பிரதிகளை யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்ற வேலைத் திட்ட பொறியியலாளர் காரியாலயத்தில் இருந்து பெற்றுக்கொள்ளல் வேண்டும்."

மாவட்ட கேள்விச்சபை,
மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்.
05. 09. 2003

செ.பத்மநாதன்,
தலைவர்
மாவட்ட கேள்விச் சபை,
யாழ்ப்பாணம்.

(C/6623)

## கண்ணீரஞ்சலி

எமது பாடசாலையில் நீண்ட காலம் ஆசிரியப் பணியாற்றி ஓய்வுபெற்ற

### பண்டிதர் [illegible] சண்முகராசா

அவர்களின் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது இதயபூர்வமான அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகத்தினர்,
யாழ். மல்லாகம் மகா வித்தியாலயம்.


(C/6620)


# மிதிவெடி அபாயக் கல்வி வாரம் – யாழ். மாவட்டம்


## செப்ரெம்பர் 1 தொடக்கம் செப்ரெம்பர் 7 வரை

**மிதிவெடி, வெடிபொருட்களினால் ஏற்படும் ஆபத்தைத் தடுக்க பொதுமக்களாகிய நாம் அவதானமாக இருப்போம்**

- ☒ நாங்கள் செல்லும் இடங்களுக்கு முன்னர் பாவித்த பாதுகாப்பான பாதைகளையே பாவிப்போம்.
- ☒ நாம் புதிய இடங்களுக்குச் செல்லும் போது அவ்விடத்தின் மிதிவெடி அபாயம் பற்றி அப்பிரதேசவாசிகளிடம் கேட்டுத் தெரிந்து கொள்வோம்.
- ☒ எமது பிரதேசத்துக்குள் புதிதாக வருபவர்களிற்கு எமது பிரதேசத்தின் பாதுகாப்பு நிலை பற்றிய சரியான தகவல்களைக் கொடுப்போம்.
- ☒ மீளக் குடியமரும் பிரதேசமாக இருப்பின் அப்பிரதேசம் முழுமையாக மிதிவெடி இல்லாத பிரதேசமா என்பதை உறுதிசெய்து மீளக்குடியமருவோம்.
- ☒ இனம்புரியாத மர்மப் பொருட்களைக் கண்டால் உரிய இடங்களுக்கு அறிவிப்போம்.
- ☒ மிதிவெடிகள், வெடிபொருட்கள் சம்பந்தமான அபாயப் பலகைகள் உள்ள இடங்களிற்குள் நுழையாமலும், அபாயப் பலகைகள் உரிய இடத்தில் உள்ளது என்பதையும் உறுதிப்படுத்துவோம்.
- ☒ மிதிவெடி, வெடிப்பொருட்களின் பாதிப்புக்களை மற்றவர்களுக்கும் எடுத்துக்கூறி மிதிவெடி, வெடிபொருட்களினால் ஏற்படும் பாதிப்பைத் தடுப்போம்.







**மாவட்ட மிதிவெடிச் செயற்பாட்டு அலுவலகம், யாழ்ப்பாணம்.**

(C/6601)

# அமெரிக்க - பிரிட்டிஷ் அதிபர்கள்

# உலக மகா பயங்கரவாதிகள்

## நீதிமன்றத்தில் பிரஸ்தாபம்

(ஜகார்த்தா)

இந்தோனேசியாவின் பாலித் தீவில் இடம்பெற்ற குண்டுத்தாக்



குதல் சம்பவத்தில் முக்கிய சந்தேக நபராகக் கருதப்படும் நபரொருவர் தான் ஒரு சிறிய பயங்கரவாதியே என்று நீதிமன்றத்தில் நேற்றுமுன் தினம் ஒப்புக்கொண்டுள்ளார்.

தன்னை விட, அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் குறித்தும், அமெரிக்காவின் நெருங்கிய நேசநாடுகள் குறித்தும் உலகம் கூடிய கவனம் செலுத்தவேண்டும் என்றும் அவர் மேலும் நீதிமன்றில் கூறியுள்ளார்.

பயங்கரவாதத்தின் மன்னர் என அமொிக்காவை இந்தோனேசிய உதவி ஜனாதிபதி ஹம்ஸஹாஷ் நேற்று முனதினம் குற்றம் சாட்டிய நிலையில், மேற்படி நபர் தான் பயங்கரவாதி என்பதை ஒப்புக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தான் ஒரு சிறிய பயங்கரவாதி என்றும், தன்னைவிட பெரிய பயங்கரவாதிகளாகக் காணப்படும், ஏரியல ஷரோன், டொனிப்பிளேயர், ஜோர்ஜ் டபிள்யூ புஷ் ஆகியோர் சுதந்திரமாக நடமாடுவதாகவும் 43 வயதான லொக்னாஸ் என்ற அந்த நபர் தெரிவித்திருக்கின்றார்.



இந்தப் பயங்கரவாதிகளைத் தங்களின் இஷ்டத்திற்கு செயற்பட விட்டால், அடுத்துவரும் போர்களின் போது அணுகுண்டுகளைப் பாவிப்பார்கள் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (உ-9)

# தீவிரவாதிகளின் முக்கிய இடங்களை இந்தியப் படைகள் முற்றுகை

(புதுடில்லி)

ஜம்மு - காஷ்மீர் மாநிலத்தில் கட்வா காட்டுப் பகுதியில் தீவிரவாதிகள் பதுங்கியுள்ள இடங்களை இந்திய இராணுவம் சுற்றிவளைத்து தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்திருப்பதாக இந்தியத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தீவிரவாதிகள் தப்பிச் செல்ல முடியாத படி அனைத்து வழிகளும் மூடப்பட்டு விட்டதால், விரைவில் அவர்கள் கைது செய்யப்படுவார்கள் என்று இந்திய இராணுவத்தினர் கூறியுள்ளனர்.

இதேவேளை, காஷ்மீரில் இராணுவ முகாம் ஒன்றைத் தற்கொலைத் தாக்குதல் மூலம் தகர்க்க எடுத்த முயற்சி முறியடிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-2)

# சூடான் உள்நாட்டுப் போரை முடிவுக்குக் கொண்டுவர முயற்சி


(கார்டூம்)

சூடானில் இடம்பெற்று வருகின்ற உளளூர் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரும் வகையில் பேச்சுவார்த்தை ஒன்று நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

சூடான் மக்கள் விடுதலை முன்னணி இராணுவத்திற்கும், உதவி ஜனாதிபதிக்கும் இடையில் இந்தப் பேச்சுவார்த்தை நைரோபிக்கு அருகாமையில் உள்ள நகரொன்றில் இடம்பெற்றுள்ளது.

இந்தப் பேச்சுவார்த்தையின் போது, சூடான் பிரிவினைவாத அமைப்பினரின் கோரிக்கை குறித்து கலந்துரையாடப்பட்டன.

மேலும், அடுத்தகட்டப் பேச்சுவார்த்தைகளை எதிர்வரும் 10ஆம் திகதி நடத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (உ-9)



ஈராக்கில் அண்மையில் இடம் பெற்ற குண்டுத்தாக்குதலில் உயிரிழந்த மதத்தலைவர் அயதுல்லா மொஹமட் பாஹிர் அல் - ஹக்கீமின் இறுதிச் சடங்கு துருக்கியில் இடம்பெற்றபோது அஞ்சலியில் கலந்துகொண்டவர்களைப் படத்தில் காணலாம்.

# அல்கெய்டாவின் தாக்குதலுக்கு அமெரிக்கா திரும்பவும் இலக்காகுமா?

## உளவுத்துறையினர் அச்சம்

(வாஷிங்டன்)

அல்ஹெய்டா அமைப்பினரால் தாக்குதல் அச்சுறுத்தல் தொடர்ந்தும் அமெரிக்காவுக்கு விடுக்கப்பட்டு வருவதாக அல்ஹெய்டா அமைப்பின் நடவடிக்கைகளை கண்காணித்து வரும் அமெரிக்க உளவுத்துறை அமைப்பான எப்.பி.ஐ. தெரிவித்துள்ளது.

எதிர்வரும் 11 ஆம் திகதியுடன் அமெரிக்க வர்த்தக நிலையம் மீது தாக்குதல் நடத்தப்பட்டு இரண்டு வருடங்கள் பூர்த்தியாகின்றன.

இதனையடுத்து, இவ்வாறான தாக்குதல் ஒன்றை மீண்டும் அங்கு நடத்துவதே அல்ஹெய்டா அமைப்பின் தலைவரான ஒஸமா பின்லேடனின் நோக்கம் என தமது உளவுத் தகவல்களை மேற்கோள் காட்டி எப்.பி.ஐ. அமைப்பின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

இந்த அமைப்பின் இத் தகவலை அடுத்து, அமெரிக்காவின் முக்கிய கேந்திர நிலையங்களின் பாதுகாப்பு மேலும் பலப்படுத்தப்பட்டு வருவதாக அந்நாட்டு உள்துறைப் பாதுகாப்புச் செயலகம் தெரிவித்துள்ளது. (உ-9)

# விஞ்ஞானி டேவிற் ஹெலியின் மர்ம மரணம் பற்றிய வினாக்களுக்கு விடையிறுப்பதை தவிர்த்த பிளேயர்

(லண்டன்)

ஐக்கிய நாடுகளின் முன்னாள் ஆயுதப் பரிசோதகரும் பிரிட்டனின் பிரபல விஞ்ஞானியுமான டேவிற் ஹெலியின் மர்ம மரணம் தொடர்பாக ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பிரிட்டிஷ் பிரதமர் டொனி பிளேயர் பதில் வழங்குவதில் பின்வாங்கியுள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின்போது, செய்தியாளர்கள் எழுப்பிய மேற்குறித்த கேள்விகளுக்குப் பதில் அளிப்பதைத் தவிர்த்து அரசாங்கத்தின் உளளூர் நடவடிக்கை குறித்து தனது கவனத்தை பிளேயர் திருப்பியிருந்தார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

எவ்வாறாயினும், ஹெலியின் மரணம் தொடர்பாக ஊடகவியலாளர்கள் தொடர்ந்தும் கேள்வியெழுப்பியதைச் சமாளிக்கமுடியாத டொனி பிளேயர் இந்த விடயத்திற்கு நீதிபதி தனது தீர்ப்பை வழங்கட்டும் என்றும் கூறியுள்ளார்.

நீதிபதி ஹற்றனின் தலைமையில் நடைபெற்றுவரும் டேவிட் ஹெலியின் மரணம் தொடர்பான வழக்கு விசாரணை எதிர்வரும் 15 ஆம் திகதி மீண்டும் ஆரம்பிக்கப்பட இருக்கிறது.

இந்த விசாரணைகளின்போது, முக்கிய சாட்சிகள் பல அழைக்கப்படுவார்கள் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. (உ-9)

# எல்லைப்புற மோதல்கள் பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைக்கும்


## அத்வானி அறிவிப்பு

(புதுடில்லி)

இந்திய - பாகிஸ்தான் எல்லைப் புறங்களில் கடந்த 10 தினங்களாக தீவிரவாதிகளுக்கும், இராணுவத்தினருக்கும் இடையில் இடம்பெறும் மோதல் காரணமாக இந்திய - பாகிஸ்தான் நாடுகளிடையே சமாதான முயற்சிகளில் பின்னடைவு ஏற்படலாம் என்று இந்தியத் துணைப் பிரதமர் எல்.கே.அத்வானி தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் தீவிரவாத அமைப்புக்களின் தாக்குதல்கள் தொடருமானால், சமாதானப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்கக் கூடிய நிலை ஏற்படாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த சில தினங்களாக இடம்பெற்று வருகின்ற மோதல்களில் இந்திய இராணுவம் வெற்றிபெற்று வருவதாகவும், முக்கியமான சில



தீவிரவாதிகள் கொல்லப்பட்டு இருப்பதாகவும், அத்வானி மேலும் தெரிவித்துள்ளார். (உ-9)

# ஆளும் அரசின் மௌனம் குறித்து கலைஞர் கருணாநிதி கடும் சீற்றம்

(சென்னை)

பொடா சட்டத்தை வாபஸ் பெற வேண்டும் என்று தாம் விடுத்த கோரிக்கை குறித்து, தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு தொடர்ந்தும் மௌனம் சாதித்து வந்தால், கடுமையான விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என்று தி.மு.க. தலைவர் மு.கருணாநிதி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

திருப்பூரிற்கு நேற்று முன்தினம் சென்றிருந்த கலைஞர் அங்கு செய்தியாளர்களைச் சந்தித்த சமயமே இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து பேசுகையில்,

பொடா சட்டத்தை வாபஸ் பெறுமாறு தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசிடம் நீண்டகாலமாகக் கோரிக்கை விடுத்து வருகின்றேன்.

இதற்கான எந்தவொரு முடிவையோ, தீர்மானத்தையோ அந்த அரசு எடுக்கவில்லை.

பயங்கரவாதத்தை ஒழிக்கும் நோக்கில் கொண்டுவரப்பட்ட பொடா சட்டம் அரசியல் ரீதியில் பழிவாங்குதல நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

எனது கோரிக்கைக்கு தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு தொடர்ந்து மௌனம் சாதிக்குமேயானால், அதன் பின் விளைவுகள் பாரதூரமானதாக இருக்கும் எனத் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, பாரதிய ஜனதாக் கட்சியுடனான தொடர்பைத் துண்டித்துக் கொள்ள தி.மு.க. தயாராகி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்குப் பா.ஜ.கவுடன், அ.தி.மு.க. நெருங்கிய தொடர்புகளை வைத்திருப்பதே காரணம் என்றும், விழுப்புரத்தில் 'மிக விரை



வில் நடைபெறவிருக்கும் தி.மு.க.வின் மாநாட்டின்போது பா.ஜ.க வுடனான' தொடர்பைத் துண்டிப்பதாக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்படுமெனவும் தி.மு.க வின் ஆதரவாளர்கள் தெரிவித்துள்ளனர். (உ-2)



சீனப் பாராளுமன்றத் தலைவர் வ,.பாங்குவோ (இடது) அண்மையில் சியோலுக்கு விஜயம் செய்தபோது தென்கொரிய தேசிய சபை சபாநாயகர் பார்க்குவான் யொங் (வலது)கை சந்தித்து உரையாடியபோது எடுக்கப்பட்ட படம். இரு நாட்டு விவகாரங்களும் வடகொரிய அணுவாயுதப் பிரச்சினை பற்றியும் இவர்கள் ஆராய்ந்துள்ளனர்.

## அ.அட்டைகள் வந்து சேர்ந்தன

(கல்வயல்)

அடையாள அட்டைக்காக விண்ணப்பித்தவர்களுக்கான ஒரு தொகுதி அடையாள அட்டைகள் தென்மராட்சி பிரதேச செயலகத்திற்கு கடந்த 3 ஆம் திகதி வந்து சேர்ந்துள்ளன.

மேற்படி அடையாள அட்டைகள் யாவும் சம்பந்தப்பட்ட கிராம சேவையாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும், உரியவர்கள் தத்தமது கிராம சேவையாளருடன் தொடர்பு கொண்டு அவற்றை பெற்றுக்கொள்ளலாம் எனவும் தென்மராட்சி பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (உ-36)

## அடிக்கல் நாட்டல்

(யாழ்ப்பாணம்)

சமுர்த்தி அதிகார சபையினால் ஒதுக்கப்பட்ட 10 இலட்சம் ரூபா மூலம் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பண்டத்தரிப்பு கிரான்பற்று பகுதியில் சமுர்த்தி வங்கி அமைப்பதற்கான அடிக்கல்லை கடந்த முதலாம் திகதியன்று சண்டிலிப்பாய் உதவிப் பிரதேச செயலர் ச. செல்வராசா நாட்டி வைத்தார். (உ-103)

# இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணவேண்டிய தார்மீகப் பொறுப்பு பிரிட்டனுக்கே உண்டு

## பழைமைவாதக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் மைக்கல் அங்க்றமிடம் அரச அதிபர் எடுத்துரைப்பு

(கொழும்பு)

இலங்கையில் நிலவுகின்ற இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டிய தார்மீகப் பொறுப்பும் கடப்பாடும் பிரிட்டனுக்கே உண்டு.

இந்த வகையில், இங்குள்ள உண்மை நிலையைக் கண்டறிந்து சமாதான நகர்வுகள் உத்வேகம்பெற பிரிட்டன் தன்னாலான பங்களிப்புக்களை செய்யவேண்டும்.

இவ்வாறு பிரிட்டன் பழமை வாதக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரும் பிரதித் தலைவருமான மைக்கல் அங்க்றமிடம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

மைக்கல் அங்க்றம் மற்றும் பழைமைவாதக் கட்சியின் முன்னாள் பொருளாளர் ஆஸ்கிறங்ற் பிரபு,பிரிட்டன் வெளிவிவகார அமைச்சைச் சேர்ந்த மனிசா குணசேகரா ஆகியோர் நேற்றையதினம் யாழ் குடாநாட்டு நிலைமைகளை நேரில் அறியும் பொருட்டு விஜயமொன்றை மேற்கொண்டனர் இதன்போது மு.ப 10.30மணியளவில் யாழ்.மாவட்டச் செயலகத்தில் அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் இவ்வாறு வலியுறுத்தப்பட்டது.

செயலக அதிகாரிகள், பிரதேச செயலர்கள் மற்றும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் பங்கேற்ற இந்த கலந்துரையாடலில், புனரமைப்பு-புனர்வாழ்வு நடவடிக்கைகள் மக்களின் மீள்குடியமர்வுப் பிரச்சினைகள் , மிதிவெடி அகற்றும் பணி, மீனவர்கள் எதிர்நோக்கும் இடர்கள் ஆகியன குறித்து புள்ளி விபரங்கள் வரைபடங்களின் உதவியுடன் அரச அதிபர் மேற்படி பிரிட்டன் குழுவிற்கு விளக்கமளித்தார்.

அத்துடன் அமுலில் உள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தினால் யுத்தநிறுத்த சூழல் ஒன்று உருவாககப்பட்டிருக்கிறதேஒழிய மக்கள் எதிர்பார்த்த சமாதானம் தோன்றி, இன்னமும் இயல்பு வாழ்க்கைக்கு திரும்பவில்லை.

காலங்காலமாக தமிழர்கள் அடக்கியொடுக்கப்பட்டு உரிமைகள் பறிக்கப்பட்டு அவர்கள் இரண்டாம்தர பிரஜைகளாக நடத்தப்பட்டதை பொறுக்கமாட்டாது தமிழ் அரசியல் தலைவர்கள் போராட்டத்தின்பால் ஈர்க்கப்பட்டனர்.

அந்த நிலையொன்று இனியும் ஏற்பட அனுமதிக்கக் கூடாது.

இனப்பிரச்சினையைத் தீர்க்க ஒரே வழிமுறை சமாதான பேச்சுவார்த்தையே என்பதில் தமிழ் மக்கள் ஒருமித்த கருத்தைக் கொண்டுள்ளனர்.

இராணுவத்தினர் பிரகடனப்படுத்தியுள்ள உயர்பாதுகாப்பு வலயங்களில் சுமார் அரை இலட்சம் குடும்பங்களின் மீள்குடியமர்வு உரிமை மறுக்கப்பட்டுள்ளது என்பதையும் அங்கு கலந்துகொண்டவர்கள் சுட்டிக்காட்டினர். (உ-4,7,16,43)

# கடந்த வருடம் 22 ஆயிரம் பேர் ரயில் ரிக்கற் இன்றி பயணம் செய்தனர்

(கொழும்பு)

ரயில் பயணங்களின் போது பயணச்சீட்டின்றி பயணம் செய்யும் பிரயாணிகளிடம் அறவிடப்படும் தண்டப்பணத்தை 10 சதவீதம் முதல் 50 சதவீதமாக உயர்த்துவதற்கு ரயில்வே அதிகாரசபை தீர்மானித்துள்ளது.

நேற்று முன்தினம் நடைபெற்ற பணிப்பாளர்சபைக் கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக அதிகாரசபையின் தலைவர் பிறேமச்சந்திரமனதுங்க தெரிவித்துள்ளார்.

இதன்படி 3 ஆம் வகுப்பில் பயணச்சீட்டின்றி பயணம்செய்யும் பயணிகளிடம் அறவிடப்படும் தண்டப்பணம் 200ரூபாவில் இருந்து 500ரூபாவாகவும் 2ஆம் வகுப்பில் பயணம் செய்யும் பயணியிடம் 850 ரூபாவும், முதலாம் வகுப்பில் பயணம்செய்யும் பயணியிடம் 500 ரூபா முதல் ஆயிரம் ரூபாவரையும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

பயணச்சீட்டின்றி பயணம் செய்பவர்களை பரிசோதனைசெய்வதற்காக தற்போதுள்ள பரிசோதகர்களின் எண்ணிக்கையினை 90 இலிருந்து 135 ஆக அதிகரிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று, கண்காணிப்பு உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையினை மேலும் 15 பேரினால் அதிகரிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் பயணச்சீட்டு இன்றி பயணம் செய்த 22 ஆயிரம் பேர் கண்டுபிடிக்கப்பட்டதாகவும், கடந்த 6 மாத காலத்தில் 11 ஆயிரத்து 500 பேர் பயணம் செய்தமை கண்டுபிடிக்கப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். ---(தி)

## 60 வயதிற்கு மேல் அமைச்சின் செயலராகப் பதவிவகிக்க முடியாது

### ஜனாதிபதி சந்திரிகா அறிவிப்பு

(கொழும்பு)

60வயதிற்கு மேல் அமைச்சுக்களின் செயலாளராக பதவிவகிக்க முடியாதென ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அறிவித்துள்ளார்.

தற்போதைய அமைச்சுக்களில் 60 வயதிற்கு மேற்பட்ட [illegible] செயலாளராக பதவி வகித்து வருகின்றனர்.

இவர்கள் அனைவரும் இவ் வருட இறுதிமட்டுமே தொடர்ந்து கடமையாற்ற முடியும்.

அமைச்சுக்களிலும், அமைச்சரவை அந்தஸ்து இல்லாத அமைச்சுக்களிலும் 64பேர் செயலாளர்களாக கடமையாற்றி வருகின்றனர்.

இதேவேளை, அமைச்சுக்களுக்கு செயலாளர்களை நியமிக்கும் போது கடைப்பிடிக்கவேண்டிய புதிய நடைமுறைகளுக்கு ஜனாதிபதி அங்கீகாரம் அளித்துள்ளார்.

இப் புதிய நடைமுறை அடுத்த வருடம் ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படுமென ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது. (தி)

## கொழும்பு மாநாட்டில் விடுதலைப் புலிகள் பங்கேற்பது குறித்து பல்வேறு ஊகங்கள்

(கொழும்பு)

இலங்கைக்கு நிதியுதவி வழங்கும் நாடுகளின் நிதிப்பிரயோகம் சம்பந்தமாக யப்பான் விசேட தூதுவர் யசூசி அகாசியினால் கூட்டப்படும் கொழும்பு மாநாட்டிற்கு விடுதலைப்புலிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ள போதும் அவர்கள் மாநாட்டில் பங்குபற்றுவது சந்தேகத்திற்கு இடமாக இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் இடைக்கால நிர்வாக சபை தொடர்பான திட்டவரைபு இம்மாதம் 12 ஆம் திகதிக்குள் அரசாங்கத்திற்கு சமர்ப்பித்து அரசின் நிலைப்பாடு தெரிவிக்கப்படாத பட்சத்தில் விடுதலைப்புலிகள் கொழும்பு மாநாட்டில் பங்குபற்றுவது சந்தேகத்திற்கிடமான ஒன்றாகவே உள்ளது.

யப்பான் கூட்டும் கொழும்பு மாநாட்டில் விடுதலைப்புலிகள் பங்குபற்றாது போனாலும் தூதுவர் யசூசி அகாசி வன்னி சென்று விடுதலைப்புலிகளை சந்திப்பதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருப்பதாக யப்பானிய தூதரக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ம)

# நாட்டைப் பாதுகாக்க ஜனாதிபதி அதிகாரத்தை பயன்படுத்த வேண்டும்

### விமல் வீரவன்ச கோரிக்கை

(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு அதிகாரப் பரவலாக்கல் மூலமே தீர்வு காணப்பட வேண்டுமென எவரேனும் கருதினால் அது வெறும் பகற்கனவாகவே முடியுமென ஜே.வி.பியின் பிரசார செயலாளர் விமல்வீரவன்ச தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 52ஆவது சம்மேளனக் கூட்டத்தில் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு அதிகாரப் பரவலாக்கலே சிறந்த வழியென ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்த கருத்தை மறுத்த விமல் வீரவன்ச நேற்று முன்தினம் இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டின் போது இதனைத் தெரிவித்துள்ளார்.

அம்மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது.

தற்போதைய சூழ்நிலையில் நாட்டைப்பாதுகாக்க வேண்டுமானால் ஜனாதிபதி தனது நிறை வேற்று அதிகாரத்தை பயன்படுத்தி நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் நிறைவேற்று அதிகாரத்தை பயன்படுத்தும் இச்சந்தர்ப்பத்தை ஜனாதிபதி தவறவிடுவாரானால் அதில் எந்தவொரு பலனையும் அவர் அனுபவிக்கப் போவதில்லை. இனப்பிரச்சினைக்கு அதிகாரப் பரவலாக்கலே சிறந்த தீர்வாக அமையுமென எவராவது கருதுவார்களானால் அது வெறும் ஏமாற்று வித்தையாகவே அமையுமென்றும் சுட்டிக்காட்டினார். (வ)

# சிறுவர்கள் மட்டத்தில் கலாசாரப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட சிறுவர் பாதுகாப்பு மையம், சிறுவர் உரிமை தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் சிறுவர்களிடையே கலாசாரப் போட்டிகளை நடத்தவுள்ளது.

இந்த வகையில், யாழ்.மாவட்டச் சிறுவர்களுக்கிடையில் கவிதை, கட்டுரை, நாடகம், பேச்சு முதலிய போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

இப்போட்டிகள் இம்மாதம் 25 ஆம் திகதிமுதல் 30 திகதிவரை இடம்பெறுவதுடன் இதில் வெற்றி பெறுபவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதி பி.ப 1.30 மணிக்கு வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (உ-7)

# தமிழில் ஆரம்பப் பிள்ளை முன்பள்ளி கல்வி அடுத்த ஆண்டுமுதல் ஆரம்பம்

(சுதுமலை)

வடக்குகிழக்கு மாகாணப் பகுதியில் உள்ள திறந்த பல்கலைக்கழகங்களின் பிராந்தியப் பயிற்சி நிலையங்கள் ஊடாக, தமிழ்மொழி மூல ஆரம்பப்பிள்ளை முன்பள்ளிக் கல்வி அடுத்தவருடம் முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதுதொடர்பாக பிள்ளைப்பராய முன்னிலைக் கல்வியின் பேராசிரியர் டாக்டர் டி.யிள்யூபலிகக்காரா கடித்மூலம் சகல பிராந்திய பயிற்சி நிலையங்களுக்கும் அறிவித்துள்ளார்.

இக்கற்கை முன்னைய காலங்களில் சிங்கள, ஆங்கில மொழிகளில் மட்டும் நடாத்தப்பட்டு வந்தமையால், வடக்குக் கிழக்கு பகுதிகளில் உள்ளவர்கள் இப்பயிற்சி நெறியை மேற்கொள்ளமுடியாதிருப்பது குறித்து முறையிடப்பட்டதை அடுத்தே இந்த மாற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தக் கல்விக்கான பாடக்குறிப்புக்களை தமிழில் வெளியிடுவதற்கான ஏற்பாடுகள் யாவும் பூர்த்தியடைந்துவிட்டதாகவும் அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-252)

## பிரித்தானியா, ஐ.அமெரிக்க நாடுகளைச் சேர்ந்த வன்முறைக்கு எதிரான சமாதானப் பணியாளர்கள் இலங்கை வருகை

(கொழும்பு)

பிரித்தானியா மற்றும் ஐக்கிய அமெரிக்காவைச் சேர்ந்த வன்முறைக்கு எதிரான சமாதானப் பணியாளர் குழுவொன்று இலங்கை வந்துள்ளது.

இலங்கையில் இடம் பெற்றுவரும் அரசியல்வன்முறைகள் மற்றும் மனிதஉரிமை மீறல்கள் தொடர்பாக அவதானித்து ஆராயும் நோக்கிலேயே மூவர் அடங்கிய இச் சமாதானப் பணியாளர் குழு தற்போது இலங்கை வந்துள்ளதாக பெப்ரல் இயக்க நிறைவேற்றுப் பணிப்பாளர் கிங்ஸ்லி ரொட்ரிகோ தெரிவித்துள்ளார்.

இங்கு தமது பணிகளை இவர்கள் ஆரம்பிப்பதற்கு முன்னரான ஆயத்த முன்ஏற்பாடுகளைத் தற்போது மேற்கொண்டு வருவதாகவும் அடுத்த மாத முற்பகுதியில் தமது பணிகளை நாடளாவிய ரீதியில் ஆரம்பிப்பார்கள் எனவும் தெரியவருகிறது.

அதனுடன் தற்போது இலங்கை வந்துள்ள பிரித்தானியா மற்றும் ஐக்கிய அமெரிக்காவைச் சேர்ந்த மூவரைத் தவிர லத்தின் அமெரிக்கா, ஆபிரிக்கா மற்றும் ஜப்பான ஆகிய நாடுகளைச் சேர்ந்த மேலும் 12பேர் அடங்கிய சமாதானப் பணியாளர் குழுவொன்றும் எதிர்வரும் 15ஆம் திகதி இலங்கை வரவுள்ளது.

இலங்கையில் சுமார் ஒருவருட காலம் தங்கியிருக்கும் இவர்கள் இங்கு நடைபெறும் அரசியல் வன்முறைகள் மற்றும் மனிதஉரிமை மீறல் விடயம் தொடர்பாக தீர ஆராய்ந்து பல முன்னேற்றகரமான செயறபாடுகளில் ஈடுபடவுள்ள அதே நேரம் வட-கிழக்கு உட்பட நாடு முழுவதும் தமது பணியை சுதந்திரமாக மேற்கொள்ளவுள்ளதாகத் தெரியவருகிறது. (உ-18)

## தொலைத்த அடையாள அட்டைகளை யாழ். ஆஸ்பத்திரியில் பெறலாம்

(யாழ்ப்பாணம்)

யாழ். அரசினர் பொது வைத்திய சாலை வளவினுள் கண்டெடுக்கப்பட்ட ஒரு தொகுதி அடையாள அட்டைகள் காரியாலயத்தில் வைக்கப்பட்டுள்ளதாகவும் உரியவர்கள் நேரில் வந்து பெற்றுக் கொள்ளலாம் என்றும் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

கிருஷ்ணானந்தன் சந்திராதேவி, பாக்கியநாதன் ஞானப்பிரகாசம், அன்னம்மா ஞானப்பிரகாசம் ஆகியோரின் தேசிய அடையாள அட்டைகளும், அன்னம்மா ஞானப்பிரகாசம், கனகமணி பாலசிங்கம், தவமணிதேவி கதிரவேலு, பாக்கியலட்சுமி சுந்தரலிங்கம், நாகரத்தினம் செல்வநேசன் ஆகியோரின் விசேட அடையாள அட்டைகளுமே இவ்விதம் கண்டெடுக்கப்பட்டுள்ளன.(உ)

## இன்று ஒரு தகவல்

# உழைத்தால் உயரலாம்

சிலர் எப்போதும் உற்சாகமாக இருக்கிறார்கள். எப்போதுமே மகிழ்ச்சியாக இருக்கின்றார்கள். சிரித்துக் கொண்டே இருக்கின்றார்கள்! இதற்கு என்ன காரணம்?

ஒரு பெரிய மனிதர் எப்போதும் சிரிக்கக் கூடியவர்! அவரிடத்தில் அவரது நண்பர் இந்தக் கேள்வியைக் கேட்டார். ''நீங்கள் எப்போதும் மகிழ்ச்சியாக இருப்ப தற்கு என்ன காரணம்?'' என்று கேட்டார். அதற்கு அந்தப் பெரிய மனிதர் இப்படி ஓர் பதில் கூறுகிறார். ''கவலைப் படுவதற்கு எனக்கு நேரமில்லை!''

இதன் பொருள் என்னவென்றால், தேவையற்ற கவலைகளையோ, சஞ்சலங்களையோ மனதில் வைத்துக் கொள்வதற்குக் கூட அவருக்கு நேரமில்லை. அப்படியா யின், உற்சாகமாக இருப்பதற்குக் காரணம் தொடர் உழைப்பு!

யார் யாரெல்லாம் உழைத்துக் கொண்டே இருக்கின் றார்களோ அவர்களெல்லாம் உற்சாகமாக இருக்கின்றார் கள் என்பதுதான் உலக ரீதியிலான கண்டுபிடிப்பு.

சிலசமயம் வேலையிலிருந்து ஓய்வு பெற்றவர்களைப் பார்ப்போம்! மிகப் பெரிய பணியிலிருந்து ஓய்வு பெற்றி ருக்கக் கூடியவர்களாக அந்த அதிகாரிகள் அல்லது பெரிய மனிதர்கள் இருப்பார்கள். ஓய்வுபெறும் வரை அந்த அலுவலகத்தில் பெரிய பதவியில் இருந்து நிறைய வேலைகளைச் செய்து கொண்டே இருந்த அவர்கள் ஓய்வுபெற்ற பின் கொஞ்சம் கொஞ்சமாக முடங்கத் தொடங்குவார்கள்.

தங்களுக்கு முக்கியத்துவம் இல்லையோ என்று அதிலேயே மூழ்கிப் போவார்கள். என்ன ஆகும்? உழைப்பில் லாமல் தேவையற்ற சஞ்சலங்களை மனம் பங்குபோட்டுக் கொள்ளும் போது அவர்களுடைய உடலும் மனமும் பாதிக்கப்பட்டு விரைவில் அவர்கள் தமது பிரகாசத்தை இழந்து உற்சாகமிழந்து விடுவார்கள்.

சாதாரணமாகவே இரவு நேரங்களில் உடல் உபாதை கள் அதிகமாகத் தெரிகின்றன. அதுவரைக்கும் தெரி யாத கால்வலி இரவில்தெரியத் தொடங்கும். அது வரையில் இல்லாத முதுகுவலி இரவில் பெரிதாகத் தோன் றும். இதற்கு என்ன காரணம்? காலையில் நாம் உழைத் துக்கொண்டே இருக்கும் போதும் வேறு பணிகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போதும் நமது மனம் இந்த உபாதை களைப் பற்றி நினைப்பதில்லை. இந்த உபாதைகள் பெரிதாகத் தோன்றுவதுமில்லை.

ஆனால் இரவு நேரத்தில் எந்த உழைப்புமின்றி மனம் தன்னந் தனியே இருக்கும் போது, சின்னச்சின்னக் கஸ்டங்கள் கூட மிகப் பெரிதாகத் தோற்றம்தரத் தொடங்குகின்றன. எனவே தான் பல சமயங்களில் உழைப்பு மக்களை உற்சாகமாக வைத்திருக்கிறது. பல சமயங்களில் என்ன? எல்லா நேரங்களிலுமே உழைப்பு எம்மை உற்சாகப்படுத்துகின்றது.

இந்த உழைப்பு இருந்து கொண்டே இருக்குமென்றால் ஒருவரது ஆரோக்கியம் நல்லதாக அமையும் ஒருவரது வாழ்நாள் கூட நீளமானதாக அமைந்து விடும்.

யார் எல்லாம் மிகஅதிக நாட்கள் உயிர் வாழ்ந்திருக் கின்றார்கள் என்று அறிவியல் ரீதியாகக் கணக்கெடுப்பு நடத்தினால், யாரெல்லாம் மிக அதிகமாக உழைத்திருக்கின றார்களோ அவர்களெல்லாம் நீண்ட உயிர் வாழ்ந்திருக்கின றார்கள் என்று கண்டு பிடிக்கமுடியும். சோம்பல் ஒருவரைக் குறைத்து விடும். அவரது ஆற்றலைக் குறைத்துவிடும். அவரது திறமையைக் குறைத்துவிடும். அவரது வாழ்நாளைக் குறைத்துவிடும். ஆனால் சோம்பல் இல்லாமல் யார் உழைத்துக் கொண்டேயிருக்கின்றார்களோ அவர்கள் நீண்ட நாட்கள் வாழ்வது என்பது மட்டுமல்ல நீண்ட நாட்கள் செம்மையாகவும் வாழ்கின்றார்கள்.

எனவேதான் உழைப்பு உற்சாகத்திற்கு அடிப்படை. உற்சாகம் அதிக உழைப்பைக் கொடுக்க மீண்டும் மீண்டும் அந்த உழைப்பு வாழ்க்கையின் உற்சாகத்தை அமுதசுரபியாகக் கொடுத்துக் கொண்டேயிருக்கின்றது.

டாக்டர் சுதா

# திருகோணமலையில் புதிய முகாம் அமைக்கப்படவில்லை

## க.கா.குழு உறுதிசெய்துள்ளது

(திருகோணமலை)

திருகோணமலை ஆண்டான் குளம் பிரதேசத்தில் தமிழீழ விடுதலைப்புலிகள் எந்தவொரு புதிய முகாமையும் அமைக்கவில்லை என யுத்தநிறுத்தக் கண்காணிப் புக்குழுவினர் உறுதி செய்துள் ளனர்.

இப்பிரதேசத்தில் தமிழீழ விடுதலைப்புலிகள் புதிய முகாம் ஒன்றை அமைப்பதாகப் பாதுகாப் புத் தரப்பினர் யுத்தநிறுத்தக் கண காணிப்புக் குழுவில் முறைப் பாடு செய்தனர்.

இதனை அடுத்து, கடந்த புதன்கிழமை அவ்விடத்துக்குச் சென்ற யுத்தநிறுத்தக் கண் காணிப்புக் குழுவினர், அங்கு விசாரணைகளை நடத்திய துடன், அத்தகைய எதுவித நட வடிக்கைகளையும் புலிகள் மேற் கொள்ளவில்லை என உறுதி செய்துள்ளனர்.

கண்காணிப்புக் குழுவினரின் விசாரணைகளின் போது இராணு வத்தினரும், பொலிஸாரும் உடனிருந்தனர் என்பது குறிப்பிடத் தக்கது. (தி)

# இருபது வருட யுத்தத்திற்கு 24 மணி நேரத்துள் தீர்வுகாணமுடியாது

## பிரதமர் ரணில் மாத்தறையில் தெரிவிப்பு

(கொழும்பு)

கடந்தகால நிகழ்வுகளைப் பேசுவதை விட அதன் மூலம் கிடைத்த அனுபவங்களைக் கொண்டு நாட்டை முன்னேற்ற நடவடிக்கை எடுப்பதே சிறந்த வழி என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் மாத்தறை மாவட்டத்துக்கு விஜயம் செய்த பிரதமர் அங்கு செய்தியாளர் கள் மத்தியில் கருத்துத் தெரி விக்கையிலேயே இவ்வாறு தெரி வித்தார்.

தொடர்ந்து கருத்து வெளியிட்ட அவர், இந்தச் செயற்பாட்டையே தற்போதைய அரசு முன் னெடுத்து வருகிறது.

அழிவுகளைக் கண்டு சோர் வடையாது, அதிலிருந்து முன்னேறுவதே சிறந்தவழி. இதன் அடிப் படையிலேயே தற்போதைய சமாதானப் பேச்சுவார்த்தைகளும் இடம்பெற்று வருகின்றன.

20 வருடகால இனப்பிரச்சி னைக்கு 24 மணிநேரத்தினுள் தீர்வு கண்டுவிட முடியாது. இதனை எதிர்க்கட்சிகளும் இனவாதக் கட்சிகளும் புரிந்துகொள்ள வேண் டும்.

இக்கட்சிகளின் புரிந்துணர்வு இன்மை காரணமாகவே சமாதா னத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டங்



களும், கண்டனப் பேரணிகளும் இடம்பெற்று வருகின்றன.

• இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக கடந்த காலங்களில் முன்னெடுக்கப்பட்ட முயற்சிகள் யாவும் தோல்வியிலேயே முடிவடைந்தன.

இவை முறிவடைந்தமைக் கான காரணங்களை அனுபவங்க ளாகக் கொண்டே தற்போதைய பேச்சுக்கள் இடம்பெற்று வருகின் றன என அவர் மேலும் தெரிவித் துள்ளார். (தி)

# சட்டவிரோத மீன் பிடித்தலுக்கு எதிராக நடவடிக்கை

(கொழும்பு)

சட்டவிரோத உபகரணங்களைப் பயன்படுத்தி மீன்பிடித் தொழி லில் ஈடுபடுவோருக்கு எதிராக கடும் சட்டநடவடிக்கை எடுக்கப் படும் என மீன்பிடித்துறை சமுத் திரவள அமைச்சர் மஹிந்த விஜயசேகர அறிவித்துள்ளார்.

கடற்படையினரும், பொலிஸாரும் கூட்டாக இணைந்து இந்நடவடிக கைகளில் ஈடுபடும் மீனவர்க ளைப் கண்காணிக்கவுள்ளனர்.

டைனமற், சுருக்குவலை போன்ற தடை செய்யப்பட்ட மீன்பிடி உப கரணங்களைப் பயன்படுத்தி மீன் பிடிப்பதால், மீன்வளம் அழிவடை வதுடன், கடலும் மாசடைகிறது.

இதனைத் தடுக்கவே இந் நட வடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மீன்பிடித் துறை அமைச்சுத் தெரி வித்துள்ளது. (தி)

## இராசி பலன்

**06.09.2003**
**(ஆவணி 20, சனி)**

ஏகாதசி- ந.இ. 11.53 வரை
பூராடம் - பி.ப. 05.06 வரை
இராகுகாலம் - 09.04-10.34
சுபநேரம் - 03.04-4.34

ஏகாதசி விரதம்

**மேடம்**
உடல் உழைப்பு, அச்சமானநிலை, வயிற்றுக்கோளாறு, எதிர்பாராத செலவு.

**இடபம்**
எதிர்பாராத பிரச்சினை, எடுத்த கருமங்கள் தாமதமாகும், வியாதி, பொருள்நாசம்.

**மிதுனம்**
போசனசுகம், திடீர்ப்பயணம், கௌரவம், முயற்சிபலிதம்.

**கடகம்**
பகைவரால் நன்மை, செய் தொழில் நன்மை, புதியமுயற்சி, மாதர்நட்பு.

**சிங்கம்**
தாழ்ந்த சுபாவம், காரிய இடையறு, உஷ்ண நிலை, சொத்துப் பிணக்கு.

**கன்னி**
ரோகபயம், அற்பர்உறவு, தன நாசம், முயற்சி தாமதம்.

**துலாம்**
கூட்டு முயற்சி, வாக்கு மேன்மை, பணவசதி, நல்ல அனுபவம்.

**விருச்சிகம்**
அதிகசெலவு, போசனசுகக் குறைவு, விவாதம், காரியதாமதம்.

**தனுசு**
ஆழ்ந்தசிந்தை, புதிய பொருள் சேர்க்கை, சயன சுகம், நண்பர்கள் உதவி.

**மகரம்**
பிதாசிந்தை, சோம்பல், பணிவிடை, கோபப்படுதல்.

**கும்பம்**
சிநேகிதர் நல்வரவு, மனமகிழ்ச்சி, முயற்சிகைகூடும், கீர்த்தி.

**மீனம்**
சுபநிகழ்ச்சி, உற்சாகம், தொழிலில் ஆர்வம், அதிகாரிகள் பாராட்டு.

(பழையநேரப்படி கணிப்பிடப் பட்டது)

வளவன்.

# பூநகரி மாணவர்களுக்கு சத்துணவு வழங்கல் ஆரம்பம்

(செம்பியன்பற்று)

கிளிநொச்சி அரசாங்க அதிப ரின் ஏற்பாட்டில் உலக உணவுத் திட்ட நிறுவனத்தின் உதவியு டன், மாணவர்களிற்கு சத்துணவு வழங்கும் ஆரம்ப நிகழ்வு அண் மையில் பூநகரி மகாவித்தியா லயத்தில் நடைபெற்றது.

கோட்டக் கல்விப் பணிப்பாளர் தி.கணபதிப்பிள்ளை தலைமை யில் நடைபெற்ற இந்நிகழ்வில், மங்கள விளக்கை பாடசாலை அதிபர் எஸ்.கியூ.பி.மொறாயஸ், பிரதேச செயலர் வைரமுத்து ஆகி யோர் ஏற்றி வைத்தனர்.

தேசியக்கொடியை பூநகரி அரசியல்துறை உதவிப் பொறுப் பாளர் சாருபன் ஏற்றிவைத்தார்.

சமையல் கட்டடத்தின் பெயர் பலகையை உதவிக்கல்விப்பணிப் பாளர் மு.சண்முகராசா திரைநீக் கம் செய்துவைத்தார். (உ-42)

# கிளிநொச்சி மாவட்ட ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்க பராமரிப்பில் ஆயிரத்து 537பேர்

(செம்பியன்பற்று)

கிளிநொச்சி மாவட்ட ஊன முற்றோர் புனர்வாழ்வுச் சங்கத் தின் பராமரிப்பில் தற்போது ஆயி ரத்து 537பேர் இருப்பதாகத் தெரி விக்கப்படுகிறது.

கிளிநொச்சி, கரைச்சி, கண்டா வளை, பூநகரி ஆகிய 4 பிரதேச செயலர் பிரிவுகளைச் சேர்ந்த இவர் களில், யுத்தம் காரணமாக 630 பேரும் விபத்தின் விளைவாக 90 பேரும் நோய்த்தாக்கத்தின் காரணமாக 557 பேரும், பிறப்பில் 260 பேரும் ஊனமடைந்தவர்க ளாகக் காணப்படுகின்றனர்.

கிளி. கரைச்சிப் பிரதேசத்தில் 699 பேரும் பூநகரிப் பிரதேசத்தில் 405 பேரும் கண்டாவளைப் பிர தேசத்தில் 433 பேரும் இவர்களில் அடங்குகின்றனர்.

இவர்களிற்கான புனர்வாழ்வு நடவடிக்கையினை கிளிநொச்சி மாவட்ட ஊனமுற்றோர் புனர்வாழ் வுச் சங்கம் கடந்த 13 வருடங்க ளாக அரச, அரச சார்பற்ற நிறு வனங்களின் நிதியுதவியுடன் மேற்கொண்டு வருகின்றமை குறிப் பிடத்தக்கது. (உ-42)

# சீருடை, பாடநூல் விநியோகத்திற்கு 136 கோடி 40 இலட்சம் ரூபா ஒதுக்கீடு

(கொழும்பு)

அடுத்த ஆண்டிற்கான பாட சாலை மாணவர்களின் இலவச பாடநூல் மற்றும் சீருடை விநி யோகம் ஆகியவற்றிற்கென 136 கோடி 40 இலட்சம் ரூபா நிதியை அரசாங்கம் ஒதுக்கியுள்ளது.

நாடளாவிய ரீதியிலுள்ள பாட சாலைகள் அனைத்துக்குமான இலவச பாடநூலுக்கென 61 கோடி 40 இலட்சம் ரூபா நிதியும் இலவச சீருடைக்கென 75 கோடிரூபா நிதியும் அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்டுள் ளன.

இலவசமாக பாடசாலை மாண வர்களுக்காக வழங்கப்படும் சீருடைக்குத் தேவையான துணி யின் ஒருபகுதி சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்படவுள்ள அதேநேரம், மிகுதி உள்ளூர் வர்த்தகர்களிடமிருந்து கொள் வனவு செய்யப்படவுள்ளன.

அத்துடன், பாடநூல்களை அச்சிடும் பணி அரச அச்சகக் கூட்டுத்தாபனம், அரசாங்க அச் சகத் திணைக்களம் உட்பட மற்றும் 23 தனியார் அச்சகங்க ளிடமும் ஒப்படைககப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. (உ-18)

# குப்பை மேடுகளாக மாறும் வீதிகள்

(வேலணை)

வேலணை வங்களாவடி மற் றும் இப்பகுதிப் பிரதான வீதி களிலும் குப்பை கூழங்கள் குவிக் கப்படுவதால், அப்பகுதிகளால் பிரயாணம் செய்யமுடியாமல் இருப்பதாக பிரயாணிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், வேலணை அம்மன் கோவிலுக்குச் செல்லும் வீதி யோரங்களும் பற்றைகள் மற்றும் குப்பைகளால் நிறைந்து காணப் படுவதால் மக்கள் அப்பாதையால் நடமாட முடியாமல் இருப்பதாக வும், இதனால் பல இடஞ்சல் களுக்கு முகம் கொடுக்கவேண் டிய சூழ்நிலை உருவாகியுள்ளதாக வும் தெரிவிக்கப்படுகிறது. (உ-47)

# கேள்வி அறிவித்தல்

## பிரதம பொறியியலாளர், அலுவலகம்,

1. கீழ்வரும் வேலைகளுக்கான கேள்விகள் யாழ்ப்பாணம், கட்டடங்கள் திணைக்களம் (மாகாணம்) பிரதம பொறியியலாளர் அலுவலகக் கேள்விச் சபையினரால், 2003 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 23ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணிவரை யாழ்ப்பாணம், கடற்கரை வீதியில் அமைந்துள்ள பிரதம பொறியியலாளர் (மாகாணம்), கட்டடங்கள் திணைக் களத்தில் ஏற்றுக்கொள்ளப்படும். பெறப்பட்ட கேள்விகள் எமது அலுவலகத்தில் உடனடியாகத் திறக்கப்படும்.
2. நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தில் ICTAD கட்டடங்கள் நிர்மாணிப்பற்கு M-9 தரங்களை உடைய அல்லது அதற்கு மேல் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்கள் மட்டும் கேள்விப் பத்திரங்கள் கோருவதற்கு தகுதியுடையோராவார்.
3. ஒப்பந்தப் பத்திரங்ளைப் பெறுவதற்கு முன்னர் நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தினரால் வழங்கப்பட்டதும், இற்றைவரை செய்யப்பட்ட வேலைகளின் விபரங்கள் அடங்கியதுமான பதிவுப் புத்தகத்தை யாழ்ப்பாணம், கட்டடங்கள் திணைக்களம் (மாகாணம்), நிறைவேற்றுப் பொறியியலாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.
4. தகுதியுடையோர் மட்டும் அட்டவணையில் உரிய கேள்வி வைப்புப் பணத்தைச் செலுத்த அனுமதிக்கப்படுவர். வைப்புப் பணத்தை யாழ்ப்பாணம், கட்டடங்கள் திணைக்களம், (மாகாணம்), பிரதம பொறியியலாளர் அலுவலகத்தில் செலுத்தி பற்றுச்சீட்டைப் பெற்று கேள்விப் பத்திரங்களை 2003ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 22 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3மணிவரை யாழ்ப்பாணம் கட்டடங்கள் திணைக்களம் (மாகாணம்), நிறைவேற்றுப் பொறியியலாளரிடம் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.
5. கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும் போது, கேள்விதாரர் அல்லது அவரது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி சமுகமளிக்க முடியும்.

| இல. | வேலை விபரம் | மீளளிக்கப்படாத கேள்வி வைப்புப் பணம் ரூபா. | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் ரூபா. |
|---|---|---|---|
| 01 | சங்கானை சுற்றியல்கூற்று வைத்தியசாலையில் நீர் விநியோக, மலசலகூட வசதிகளை மேம்படுத்தல். | 500.00 | 10, 000.00 |
| 02 | குளமங்கால், மல்லாகத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் புதுப்பித்தல். | 500.00 | 10, 000.00 |
| 03 | சுகாதார பாராமரிப்பு நிலையம், தொண்டமனாற்றில் நீர் விநியோகமும், இரண்டு மலசலகூட வசதிகளை மேம்படுத்தல். | 500.00 | 8, 000.00 |
| 04 | ஆரம்ப சுகாதார நிலையம் கரணவாயில் நீர்விநியோக வசதியை மேம்படுத்தல். | 250.00 | 3,500.00 |
| 05 | மாவட்ட வைத்தியசாலை நெடுந்தீவில் நீர் விநியோக வசதியை மேம்படுத்தல் | 250.00 | 6,000.00 |
| 06 | மத்திய மருந்தகம் இனுவில் நீர் விநியோக வசதியை மேம்படுத்தல். | 250.00 | 2,000.00 |
| 07 | கிராமோதய சுகாதார நிலையம் புள்ளியில் நீர் விநியோக, மலசலகூட வசதிகளை மேம்படுத்தல். | 250.00 | 3,500.00 |
| 08 | கிராமிய வைத்தியசாலை வட்டுக்கோட்டையில் நீர் விநியோக மலசலகூட வசதியை மேம்படுத்தல். | 250.00 | 2,000.00 |
| 09 | கிராமோதய சுகாதார நிலையம் வாதரவத்தையில் நீர் விநியோக, மலசலகூட வசதியை மேம்படுத்தல். | 500.00 | 10,000.00 |
| 10 | வேலணை கிராமிய வைத்தியசாலையைப் புதுப்பித்தல். | 500.00 | 8,000.00 |
| 11 | மத்திய மருந்தக மகப்பேற்றுமனை கரவெட்டியில் நீர் விநியோக, மலசலகூட வசதியை மேம்படுத்தல். | 250.00 | 2,500.00 |
| 12 | கிராமோதய சுகாதார நிலையம் சாவற்காட்டில் நீர் விநியோக, மலசலகூட வசதியை மேம்படுத்தல். | 250.00 | 5,000.00 |
| 13 | ஈவினை ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிலையத்தைப் புதுப்பித்தல். | 250.00 | 4,000.00 |
| 14 | கிராமிய வைத்தியசாலை சங்குவேலியில் 2000 லீற்றர் தண்ணீர் தாங்கி, குழாய்க்கிணறு, சுற்றுமதில், வாயிற்கதவுதானுடன் மற்றும் முட்கம்பி வேலி நிர்மாணித்தல். | 250.00 | 6,800.00 |
| 15 | கொடிகாமம் மத்திய மருந்தகத்தில் உள்ள பிரசவ அறை திருத்தவேலையும், நீர்த்தாங்கி அமைத்தல், நீர்விநியோகக் குழாய் அமைத்தலும். | 250.00 | 7,000.00 |
| 16 | தோப்பாய் சுற்றியல் கூறு வைத்தியசாலை மலசலகூட திருத்தவேலை. | 250.00 | 7,000.00 |
| 17 | மந்துவில் கிராமிய சுகாதார நிலையத்தில் 2000 லீற்றர் நீர்த்தாங்கி, கிணறு அமைத்தல். | 250.00 | 8,000.00 |
| 18 | சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலையில் இரு மலசல கூடம் நிர்மாணித்தல். | 250.00 | 4,000.00 |
| 19 | கோண்டாவில் கிராமிய சுகாதார நிலையத்திற்கு தண்ணீர் வசதியை மேம்படுத்தல். | 500.00 | 8,000.00 |
| 20 | கட்டடங்கள் திணைக்கள மலசலகூடத் திருத்தவேலை. | 250.00 | 1,500.00 |

6. கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சிக்கலாம். மேலதிக விபரங்களை யாழ்ப்பாணம், கட்டடங்கள் திணைக்களம் (மாகாணம்), நிறைவேற்றுப் பொறியியலாளரிடம் இருந்து வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

**பிரதம பொறியியலாளர் அலுவலகம்,**
**கட்டடங்கள் திணைக்களம் (மாகாணம்)**
**கடற்கரை வீதி, யாழ்ப்பாணம்.** (சி-6624)

**பிரதம பொறியியலாளர்,**
**யாழ்ப்பாணம்.**

# சப் இன்ஸ்பெக்டருக்கு 7 ஆண்டுகள் சிறைத்தண்டனை

(கொழும்பு)

கொலைசெய்யும் நோக்குடன் நபர் ஒருவரை கடத்திச் சென்றதாகக் குற்றம் சாட்டப்பட்ட டட்லி.டி. சில்வா என்ற சப்இன்ஸ் பெக்டருக்கு காலி நீதிமன்றத்தி னால் விதிக் கப்பட்ட 7ஆண்டுகள் சிறைத்தண்டனையை கொழும்பு உயர் நீதி மன்றம் உறுதி செய்துள்ளது.

1989ஆம் ஆண்டு காலி பறைதுடுவப்பிரதேசத்தில் வசித்த நபர் ஒருவரையே மேற்படி சப் இன்ஸ் பெக்டர் கடத்திச் சென்றதாகக் குற்றம் சாட்டப்பட்டு நீதிமன்றத் தினால் தண்டனை விதிக்கப்பட்டது.

இந்தத் தண்டனையை எதிர்த்துப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் கொழும்பு உயர் நீதிமன்றில் மனுவொன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

இம் மனுவை விசாரணை செய்த உயர்நீதிமன்றம் அவருக்கு வழங்கப்பட்ட தீர்ப்பை உறுதி செய்து தீர்ப்பளித்துள்ளது. (தி)

# கிழக்கு மாகாண அபிவிருத்திக்கு 280 கோடி நிதிஉதவி

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தின் கரையோர அபிவிருத்திக்கென ஆசிய அபிவிருத்தி வங்கி 280 கோடி ரூபாவை வழங்க முன்வந்துள்ளது.

கிழக்குக் கரையோர அபிவிருத்தித்திட்டத்தின் கீழ் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களின் கரையோரக் கிராமங்கள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

கடற்கரையில் இருந்து 5கிலோ மீற்றர் தூரத்துக்குள் உள்ள சகல கிராமங்களினதும் உட்கட்டமைப்பு வசதிகள், சுகாதார, கல்வி மற்றும் கரையோர மீன்பிடித்திட்டங்கள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

இது தொடர்பான உடன்படிக்கையில் ஆசிய அபிவிருத்தி வங்கியும் வடக்கு- கிழக்கு மாகாண சபையும் கைச்சாத்திட்டுள்ளன. (தி)

# டெங்கு ஒழிப்புத் திட்டம் பளையில் நேற்று முதல்அமுல்

(பளை)

பளை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவில் டெங்கு நோய ஒழிப்பு நடவடிக்கை நேற்று முதல முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்தவகையில் [illegible] சார்பற்ற நிறுவனங்கள், வியாபார நிலையங்கள், பாடசாலைகள், வீடுகள் என்பவற்றிற்கு அருகில் உள்ள நுளம்பு பெருக்கத்திற்கு ஏதுவான பொலித்தீன், தகரப் பேணி, சிரட்டை, ரயர் என்பனவற்றை அகற்றுமாறு சம்பந்தப்பட்டவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (உ-97)

# தென்னிலங்கை வீதி புனரமைப்புக்கு நோர்வே 10 கோடி உதவி

(கொழும்பு)

தென்னிலங்கை கிராமப்புற வீதி புனரமைப்புக்கென நோர்வே அரசு 10 கோடி ரூபாவை வழங்கியுள்ளது.

இந்நிதி தென்னிலங்கையில் மாகாணசபைகள் பிரதேச சபைகள் ஊடாக வீதி புனரமைப்பிற்கென ஒதுக்கீடு செய்யப்படவுள்ளன.

காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை, இரத்தினபுரி மாவட்டங்களில் உள்ள 120 கிலோமீற்றர் நீளமான வீதிகள் புனரமைக்கப்படவுள்ளன.

அத்துடன் இந்நிதியின் உதவியுடன் 5 புதிய பாலங்களும் 15 தொங்கு பாலங்களும் நிர்மாணிக் கப்படவுள்ளன. (தி)

# மட்டு.மாவட்டத்தில் நேற்று துக்கதினம் அனுஷ்டிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்ட மக்கள் பெருமன்றத்தின் ஏற்பாட்டில் நேற்று துக்கதினம் அனுஷ்டிக்கப்பட்டது.

கடந்த 1990 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் இடம்பெற்ற வன்முறைச் சம்பவத்தின் போது கொல்லப்பட்ட 158 பொதுமக்களை நினைவு கூரும் வகையிலேயே இத்துக்க தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

வர்த்தக நிலையங்கள், சந்தைகள், அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் பிரதான வீதிகள் எங்கும் கறுப்புக்கொடிகள் பறக்கவிடப்பட்டு கிழக்கு பல்கலைக்கழகத்தில் நேற்றுக்காலை விசேட கூட்டமொன்றும் நடைபெற்றது.

துக்கதினம் அனுஷ்டிக்கப்பட்ட போதிலும், இயல்பு நிலை பாதிக்கப்படவில்லை என்பதுடன் நகர்ப்புறச் செயற்பாடுகள் வழமைபோல் இடம்பெற்றன. (தி)

# பால்சாலை திறக்கப்படாததால் கால்நடை வளர்ப்பாளர் ஏமாற்றம்

(நவக்கிரி)

அச்சுவேலி பொதுச்சந்தையின் மையப்பகுதியில் பால்சாலை ஒன்றினை திறப்பதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், அப்பணி இடைநிறுத்தப்பட்டுள்ளதால் கால்நடை வளர்ப்பாளர்கள் ஏமாற்றமடைந்துள்ளனர்.

இப்பகுதி மக்கள் கால்நடை வளர்ப்பதில் ஆர்வத்தோடு ஈடுபட்டு வருகின்ற போதிலும், சேகரிக்கும் பாலை சந்தைப்படுத்த வழியின்றி இருந்து வருவதும் இதனால் பொருளாதார ரீதியில் அவர்கள் பாதிப்படைந்து வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-233)

# பொதுமலசல கூடமின்றி பொதுமக்கள் அவலம்

(வேலணை)

தீவகத்தின் கேந்திர நிலையமாக விளங்கும் வேலணையில் பொது மலசலகூட வசதி இன்மையால், பொது மக்கள் பெரும் இடைஞ்சல்களுக்கு ஆளாகவேண்டிய சூழ்நிலை உருவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உதவி அரசாங்க அதிபர் பணிமனை, பிரதேசசபை, மின்சார சபை மற்றும் மருத்துவமனை உள்ளிட்ட மேலும் பல முக்கிய அலுவலகங்களுள்ள வங்களாவடிப் பகுதியில் பொது மலசலகூடம் எதுவும் இல்லை.

அத்துடன், இப்பகுதியூடாக நயினாதீவிற்குச் செல்லும் தமிழ், சிங்கள யாத்திரிகர்கள், பேருந்துத் தரிப்பிடத்திலும் பொதுமலசலகூட வசதியின்மையால், பெரும் சிரமத்திற்குள்ளாவதாகவும் கூறப்படுகிறது. (உ-47)

# செய்தித் துளிகள்

## கணனிப் பயிற்சி நிலையம்

(யாழ்ப்பாணம்)

மாணவரிடையே கணனியறிவை மேம்படுத்தும் வகையில் நல்லூர் பிரதேச செயலர் பிரிவிலுள்ள அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தில் கணனிப் பயிற்சி நிலையமொன்று புதிதாக அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இப்புதிய கணனிப்பயிற்சி நிலையத் திறப்பு விழாவை அரசஅதிபர் செ.பத்மநாதன் வைபவரீதியாக திறந்து வைத்தார்.

இப்பயிற்சி நிலையத்தின் மூலம் பிரதேச செயலர் பரிவு ரீதியாக நல்லூர் 20பேர், யாழ்ப்பாணம் 10பேர், கோப்பாய் 10பேர் என்ற ரீதியில் மொத்தம் 40 பேர் பயனடையவுள்ளனர். (உ-7)

## பொலிஸாரை கிண்டல் செய்யும் நிகழ்ச்சி ரத்து!

(கொழும்பு)

ரூபவாகினி தொலைக்காட்சியில் இடம்பெற்றுவந்த பொலிஸாரைக் கிண்டல் செய்யும் சிங்களத் தொடர்நிகழ்ச்சியை நிறுத்திவிடும்படி பொலிஸ்மா அதிபர் கேட்டிருக்கிறார் என்று தெரிகிறது.

பொலிஸாரின் பழங்கால சீருடைகளில் தோன்றும் இத்தொடர் நிகழ்ச்சிப் பாத்திரங்கள் பொலிஸ் திணைக்களத்தின் செயற்பாடுகளை கிண்டல் செய்யும் வகையில் இருப்பதாக கூறப்படுகிறது.

அரசு சார்ந்த ஒரு நிறுவனம் பொலிஸாரை ஏளனம் செய்யும் வகையில் பயன்படுத்தப்பட்டிருக்கலாகாது என்று பொலிஸ்மா அதிபர் ஆனந்தராஜா கூறியிருக்கிறார். (பி)

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

அடுத்த ஆண்டு வைகாசி மாதம் சைவபரிபாலன சபையினால் நடாத்தப்படும் சைவ சித்தாந்த பிரவேச பால பண்டிதர் தேர்வுகளுக்கான முடிவுத்தினம் இம்மாதம் 30 ஆம் திகதியெனவும், விண்ணப்பிக்க விருப்புவோர் விண்ணப்பப் படிவங்களை கடிதமூலம் பெற்றுக் கொள்ளலாம் எனவும் சைவபரிபாலன சபை செயலாளர் வ.கந்தசாமி தெரிவித்துள்ளார். (உ-8)

## மிதிவெடி விழிப்பு பிரசுரம் விநியோகம்

(சுதுமலை)

மிதிவெடி அபாயக் கல்வி வாரத்தையொட்டி கடந்த வியாழக் கிழமை சுன்னாகம் நகரப் பகுதியில் 'அபாயத்திலிருந்து எங்களைப் பாதுகாக்க உத்திகளைக் கையாளுவோம்' என்னும் தலைப்பிலான துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப் பட்டன. (உ-104)

## விசேட பொலிஸ் பிரிவு

(கொழும்பு)

சகல பொலிஸ் பிரிவுகளிலும் பொதுமக்களுக்கு பொலிஸாரின் உதவி கிடைக்கும் வகையில் நடவடிக்கைப் பிரிவும், அவசர பொலிஸ் சேவையும் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

பொலிஸ்மா அதிபர் ரி.ஈ.ஆனந்தராஜாவின் உத்தரவிற்கு அமையவே இப்பிரிவு ஆரம்பித்து வைக்கப்பட்டதாக பொலிஸ் தலைமையகம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

24மணித்தியாலமும் இயங்கும் இப்பிரிவுக்கு குற்றச் செயல்களுடன் தொடர்புடைய தகவல்களை அறிவிக்குமாறு அவ் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (தி)

## வருடாந்த திருப்பலி

(சுன்னாகம்)

மல்லாகம் புதுமை மாதா தேவாலயத்தின் வருடாந்த திருப்பலி நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

எதிர்வரும் 14ஆம் திகதி திருச்சொரூப பவனியுடன் ஆலயத் திருவிழா நிறைவடையும். (இ-104)

## சமுர்த்தி வங்கி சங்கம் திறப்பு

(கந்தரோடை)

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கோப்பாய் பூதர்மடம் சமுர்த்தி வங்கிச் சங்கத் திறப்பு விழா எதிர்வரும் 9ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப 10.00 மணிக்கு கோப்பாய் பிரதேச செயலர் க.கேதீஸ்வரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

மேற்படி நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போலும், சிறப்பு விருந்தினராக யாழ்.மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் தி.மகேஸ்வரகுமார் வலிகாமம் கிழக்கு அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.யாழவன் வலிகிழக்கு பிரதேச சபை செயலாளர் க.வெங்கடாசலம், கோப்பாய் உதவிப் பிரதேச செயலர் க.இராசதுரை, கணக்காளர் செ.மனோகரன் , கோப்பாய் பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ஆ.கதிரமலை புள் கோப்பாய் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் க.சிதம்பரப்பிள்ளை ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

கௌர விருந்தினர்களாக யாழ். பிரதேச செயலக தலைமை சமுர்த்தி முகாமையாளர் திருமதி ராகினி யோகராசா, நீர்வேலி ப.நோ.கூ.சங்க பொது முகாமையாளர் ஆ.மகாலிங்கம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (உ-18,233)

## அட்டகாசக் குழுக்களால் தொல்லை

(கொழும்புத்துறை)

யாழ்குடாநாட்டுப் பகுதியில் தற்போது பரவலாக இடம்பெற்று வரும் இளைஞர் குழுக்களின் அட்டகாசத்திற்கு சனசமூகநிலையங்களும் தப்பவில்லையெனத் தெரியவருகிறது.

குருநகர் றெக்கிளமேசன் சனசமூக நிலையத்தில் அரட்டையடிப்பதற்காக கூடும் இளைஞர்கள் அங்கு பல தகாத நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி சனசமூக நிலையத்தை பயன்படுத்துவோருக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் அங்குள்ள பத்திரிகைகள் மற்றும் நூல்கள் ஆகியவற்றை கிழித்து சேதப்படுத்தியும் அங்கிருந்து தகாத சொற்பிரயோகங்களை பிரயோகித்தும் கூச்சலிட்டும் வருவதாக அப்பகுதி மக்கள் பெரும் கவலை தெரிவித்துள்ளனர்.

அதேசமயம், மேற்படி இளைஞர் குழுவின் தகாத நடவடிக்கைகளை நிறுத்துமாறும் சனசமூக நிலையத்திற்கும் வாசகர்களுக்கும் ஒத்துழைப்பை வழங்குமாறும் சனசமூக நிலைய நிர்வாகத்தால் அறிவித்தல் பலகையில் துண்டுப்பிரசுரங்கள் ஒட்டப்பட்டுள்ள போதிலும் தொடர்ந்தும அவர்களின் அட்டகாசங்கள் இடம் பெற்றுவருவது இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-51)

## விதை தானியம் வழங்கல்

(வேலணை)

வேலணைப் பகுதி வறிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் முகமாக பட்டினிக்கெதிரான நிறுவனம் அவர்களுக்கு விவசாய உபகரணங்கள் மற்றும் விதை தானியங்கள் ஆகியவற்றை அண்மையில் வழங்கியுள்ளது. (உ-47)

## ரணிலைப் பயமுறுத்தும் ஹக்கீம்...




# தலைவரின் பரிசீலனைக்குப் பின்பு மாற்று யோசனைகள் நோர்வே ஊடாக அரசுக்கு அனுப்பிவைக்கப்படும்

## வன்னி திரும்பிய தமிழ்ச்செல்வன் தகவல்

(கிளிநொச்சி)

வடக்கு-கிழக்கு இடைக்கால நிர்



வாக சபைகுறித்து நாம் தயாரித்த மாற்று யோசனைகளை தமிழீழ தேசியத் தலைவர் வே.பிரபாகரனிடம் கையெழுத்து, அதுகுறித்த அவரது ஆலோசனைகளைப் பெற்ற பின்னரே நோர்வே ஊடாக அரசிற்கு எமது யோசனைகளை அனுப்பவுள்ளோம்.

இவ்வாறு நேற்று முன்தினம் கிளிநொச்சிக்குத் திரும்பிய விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.

தமிழ்ச்செல்வன் தலைமையில் கடந்த மாதம் 19ஆம் திகதி வன்னியில் இருந்தும், மட்டக்களப்பில் இருந்தும் பாரிஸ் சென்ற புலிகளின் குழுவினர் இடைக்கால நிர்வாக சபை தொடர்பான புலிகளின் திட்ட வரைபினை சட்டவல்லுநர்களுடன் தயாரித்த பின்னர் நேற்று முன்தினம் நாடு திரும்பியுள்ளமை தெரிந்ததே.

வன்னி திரும்பிய தமிழ்ச்செல்வன் கிளிநொச்சியில் வைத்துப் பத்திரிகையாளர்களைச் சந்தித்த போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் கூறுகையில், தமிழழத் தேசியத்தலைவரின் அங்ககாரத்தின் பின்னர் இம் மாற்று யோசனைகள் நோர்வே அனுசரணையாளர்களின் ஊடாக அரசாங்கத்திடம் கையளிக்கப்படும் என்றார்.

இதேவேளை, கிளிநொச்சிக்குத் திரும்புவதற்கு முன் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து நோர்வேத் தூதுவருடனும் தமிழ்ச்செல்வன் பேச்சு நடத்தியமை குறிப்பிடத்தக்கது.

இப் பேச்சுவார்த்தையின் போது பாரிஸில் தயாரிக்கப்பட்ட நகல்த் திட்டம்பற்றி பேசப்பட்டதாகவும், இத்திட்டம் இம்மாத இறுதியில் தன்னூடாக அரசிடம் கையளிக்கப்படும் எனவும நோர்வேத் தூதுவர் தெரிவித்துள்ளார் (உ-08)


# கலாலயா

பயிற்சியகம்

மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(பெருமாள் கோவிலுக்கு அண்மையில்)

## மகளிருக்கான மனைப்பொருளியலும் கைத்திறனும் பயிற்சிகள்

3 மாதகால

கேக் ஐஸிங், உணவு தயாரித்தல், கூந்தல் அலங்காரம், FABRIC PAINTING பயிற்சிகள்

6 மாதகால

உடை தயாரித்தல், பு,வேலை, கைவேலை பயிற்சிகள்.

- பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்
- இப்பயிற்சிகளுக்கு வயதெல்லை கிடையாது

புதிய சனி - ஞாயிறு வகுப்புகள் ஆரம்பம்:- 07.09.2003
புதிய கிழமை நாள் வகுப்புகள் ஆரம்பம் :- 10.09.2003

மேற்படி பயிற்சிகள் நடைபெறும் காலப்பகுதியில் கொழும்பிலிருந்து வருகைதரும் பிரபல அழகுக்கலை நிபுணரால் குறைந்த கட்டணத்தில்

- Eye brow Threading & Eye brow Plucking.
- Two types of Bleach
- Facial:- Herbal, Gold, Pearl, Fruit, Aroma.
- Waxing - Perming - Hair Colouring வகுப்புகளும், முக அழகுச் சிகிச்சை பற்றிய குறிப்புகளும், வழங்கப்படும்.

மேலும் விபரங்களை வியாழன், வெள்ளி தவிர்ந்த ஏனைய நாட்களில் பி.ப. 2.00 மணிவரை அறிந்துகொள்ளலாம்.

(C/6622)

இயக்குநர்

அரியகற்று ஆசற்றார் கண்ணும் தெரியுங்கால்
இன்மை அரிதே வெளிறு
-குறள்-

வலம்புரி

# போர் முரசு கேட்கிறது!

விடுதலைப் புலிகளிடம் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால நிர்வாகசபைக்கான திட்ட வரைபில் திருத்தங்களை மேற்கொண்ட விடுதலைப் புலிகள் அத்திட்ட வரைபை விரைவில் அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கவுள்ளனர்.

விடுதலைப் புலிகளின் முக்கிய தலைவர்களும், சட்ட வல்லுநர்களும் பிரான்சின் தலைநகர் பரிஸில் கூடித் தயாரித்த திட்டவரைபானது, அரசுக்கு அனுப்பி வைக்கப்படுவது, அத்திட்டவரைபை அரசு பரிசீலிப்பதற்கல்ல. மாறாக அத்திட்ட வரைபை அமுல்படுத்துவதற்காகவே என்பதை அரசாங்கம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

விடுதலைப் புலிகளால் தயாரிக்கப்பட்ட திட்டவரைபானது அரசின் பரிசீலனைக் குரியதல்ல, அவ்வாறு அரசு பரிசீலனை என்று ஏதாவது உச்சரிக்குமாயின் அதுவே சமாதானத்தின் முடிவிடமாக இருக்கும்.

அவ்வகையிலேயே, விடுதலைப் புலிகளின் நிலைப்பாடுஉள்ளது.ஆனால் அரசைப் பொறுத்தவரை, விடுதலைப் புலிகளால் சமர்ப்பிக்கப்படும் திட்டவரைபை அப்படியே ஏற்றுக் கொள்ளும் நிலைப்பாடும் இல்லை. இந்நிலையில், இடைக்கால சபையை வழங்க வேண்டும் என, ஜப்பானின் தலைநகர் டோக்கியோவில் நடந்த இலங்கைக்கு உதவி வழங்கும் மாநாட்டில் பிரதமர் ரணில்விக்கிரமசிங்கா கூறியிருந்தாலும், இடைக்கால சபைக்குள் அடங்கக் கூடிய அதிகாரங்கள் பற்றிய எந்த விளக்கத்தையும் அவர் தெரிவிக்கவில்லை.


பிரதமரைப் பொறுத்தவரை நிதியுதவி வழங்கும் நாடுகளிடம் தன்னை நல்ல பிள்ளையாகக் காட்டிக் கொள்வதே இலக்காக இருந்தது. அவ்வாறு தன்னை நல்லபிள்ளையாகக் காட்டிக் கொள்வதாயின், டோக்கியோ மாநாட்டில் விடுதலைப் புலிகள் பங்குபற்றாத போதிலும் அவர்களிடம் வடக்குக் கிழக்கிற்கான இடைக்கால நிர்வாக சபையை வழங்க வேண்டும் எனக் கூறுவதே ஒரே வழியாக இருந்தது.அதனால் அவர் இடைக்கால் சபையை வழங்குவதாக டோக்கியோ மாநாட்டில் கூறியிருந்தார்.

இப்போது அந்த இடைக்கால நிர்வாக சபை, அதிகாரக் கையளிப்பில் சிக்கல்பட்டுள்ளது. அரசு சமர்ப்பித்த இடைக்கால நிர்வாகசபையில் உள்ள அதிகாரங்கள் போதுமானதாக இல்லை என்பது விடுதலைப் புலிகள் தரப்பு வாதம். அதேநேரம் தம்மிடம் கையளிக்கப்படும் இடைக்கால நிர்வாக சபைக்கு என்னென்ன அதிகாரங்கள் இருக்க வேண்டும் என்பது குறித்த திட்டவரைபை புலிகள் தயாரித்துள்ளனர்.

இந் நிலையில் அதனை அரசு ஏற்குமா?என்பது கேள்விக்குறியாகையால் போர் முரசு கேட்கும் சந்தர்ப்பமே அதிகமாக உண்டு எனலாம்.

# சிறுவர்களின் கற்பனா சக்தியை வலுவாக்க
# துணைபுரியும் "கர்ச்சிக்க முடியாத சிங்கம்"

இலங்கைத் தீவில் கடந்த இருபது ஆண்டுகளாகத் தன் எதிர் காலத்தையும் தன் இருப்பையும் உத்தரவாதப்படுத்திக் கொள்ளவெனத் தமிழினம் போராடவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டதிலிருந்து ஏற்பட்ட எதிர்விளைவுகளுள் பல நூறாயிரம் ஈழத்தமிழர் உலகின் பல நாடுகளுக்கு அகதிகளாகப் புகலிடம்தேடிப் புலம்பெயர்ந்தமை




யும் ஒன்று.

இந்தப் புலப்பெயர்ச்சி வடிவம் இங்கு தமிழர் சனத்தொகையைப் பலங்குறைவித்ததாயினும் மறுபுறம் தமிழ் கூறும் நல்லுலகத்தினை உலகின் எல்லைகள்வரை விரிய வைத்தமையும் உலக நாடுகளில் உள்ள ஒவ்வொரு தமிழனையும் தமிழ்கூறும் நல்லுலகத்தை நேசிக்கும் உண்மைக் குடிமகனாக உணர்வால் உயர்த்தி விட்டமையும் தன்னின மேம்பாட்டுக்குத் தானும் பங்களிப்புச் செய்யவேண்டும் என்ற தீவிர முனைப்புக்கொள்ள வைத்துள்ளமையும் புலப்பெயர்ச்சியின் உச்சமான நல் விளைவுகளாகும். உலக நாடுகளில் வதியும் தமிழர் நடத்தும் தமிழ் வானொலிகள், தமிழ்ப் பத்திரிகைகள், தமிழ்க்கலை, கல்விக் கூடங்கள், தமிழர் நாம் எனக் காட்டும் விழாக்கள் ஒரு நாட்டில் அல்லல்படும் சகோதரத் தமிழருக்காக ஏனைய நாடுகளில் வதியும் தமிழர் நடத்தும் போராட்டங்கள் என்பன தமிழ்கூறும் நல்லுலகத்தை உள்ளத்தால் ஒரு குடைக்கழ்க் கொண்டு வந்து கொண்டிருப்பதன் வெளிப்பாடுகளே என்பதில் ஐயமில்லை.

இந்த வகையில் எண்பதுகளில் குடும்பத்தோடு புலம்பெயர்ந்து இப்பொழுது நோர்வேயில் வசிக்கும் ஈழத்தமிழ்ப் பெண்மணியாகிய பொன்னரசி-கோபாலரத்தினம் அவர்கள உலகத் தமிழச் சிறுவர்களின் மகிழ்ச்சிக்காக நல்லுருவாக்கத்திற்காக வென்று ஓர் அரும்பணியை ஆற்றியுள்ளார்.

நூல்:- கர்ச்சிக்க முடியாத சிங்கம்
எழுதியவர்:- பொன்னரசி கோபாலரத்தினம்
விலை:- ரூ.150/=

அதாவது, அந்தப் பெண்மணி நோர்வே மொழியில் நீண்ட காலமாக நிலவிவரும் சிறுவர் கதைகளின் தொகுப்பு நூல்களிலிருந்து சிறந்த பதினைந்து கதைகளைத் தெரிந்தெடுத்து, எளிய, இனிய, செவ்விய தமிழ் நடையில் மொழிபெயர்த்து, "கர்ச்சிக்க முடியாத சிங்கம்" என்ற கதையை நூலாக உருவாக்கியுள்ளார். அந்நூலை அழகிய வண்ண வண்ண ஓவியங்களுடன் நேர்த்தியான வடிவமைப்போடு அச்சிட்டு வெளியிட்டுள்ளது யாழ்ப்பாணம் முத்தமிழ் மன்றம்.

## திறனாய்வுக் களம்

இக்கதைகள் முதலில் நோர்வே மொழியிலிருந்து தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு, திருமதி பொன்னரசி ஆசிரியராக இருக்கும் "எமது சஞ்சிகை" என்ற நோர்வே தமிழிதழில் வெளிவந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஈழத்தில் சிறுவர் இலக்கியங்கள் போதிய அளவு வெளிவருவதில்லை என்ற குறையைப போக்குவதோடு, தமிழரிடையே நிலவிவரும் சிறுவர்க்கான வீரசாகசக் கதைகளில்-பேசும் விலங்குகளும் பறவைகளும் பேய்,பூதங்களும், வேதாளங்கள் வரும் கதைகளிலும் காண முடியாத விசித்திரமான, விநோதமான, அந்நியமான உயிர்வர்க்கங்களை, மனிதத் தோற்றங்களைக் கதாபாத்திரங்களாகக் கொண்ட இந்த நோர்வே நாட்டுச சிறுவர் கதைகளைப் படித்து உலகத் தமிழ்ச் சிறுவர்கள் தங்கள் கற்பனா சக்தியைப் பெருக்கிக் கொள்ளவும் அறிவினை விசாலித்துக் கொள்ளவும் வழிவகுத்துள்ள திருமதி கோ.பொன்னரசியின் சிறந்த் முன்மாதிரி பாராட்டுக்குரியது. இவர் காட்டிய வழியில் ஏனைய உலக நாடுகளில் வதியும் தமிழர்களும் அந்தந்த நாட்டுச் சிறுவர் இலக்கியங்களை மொழிபெயர்த்து உலகத் தமிழ்ச் சிறார்களுக்கு வழங்க முன்வந்தால் தமிழினத்தின் எதிர்காலம் உன்னத நிலையடையும் என்பதில் ஐயமில்லை. □

பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரம்

### எச்சரிக்கை

(கொழும்பு)

கொழும்பு தேசிய வைத்தியசாலையின் இருதய சிகிசசைப்பிரிவில் கடமையாற்றும் கதிர்ப்படத் தொழில் நுட்பவியலாளர்களின் இடைநிறுத்தப்பட்ட மேலதிக சேவைக்காலக் கொடுப்பனவை மீண்டும் வழங்காவிடின் மேலதிக சேவையினைக் கைவிடவேண்டியநிலை ஏறபடும் என தொழில்நுட்பவியலாளர் சங்கம் எச்சரித்துள்ளது. (உ-08)

### ரயில்பாதை அமைப்பு

மாத்தறைக்கும் மாதம்பைக்கும் இடையிலான புகையிரதப் பாதை அக்குரச, வெனியாயப் பகுதியூடாக அமைக்கப்படவுள்ளது.

இந்தியக் கம்பனிஒன்று இப்பாதையை அமைக்க முன்வந்துள்ளது. இந் நிர்மாணப் பணிகள் அடுத்தமாத நடுப்பகுதியில் ஆரம்பிக்கப்படும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். (தி)

# மக்களைத் திசைதிருப்பும் முயற்சியில்
# சமாதான எதிர்ப்புச் சக்திகள்
## வவு.வெகுஜன அமைப்புகள் கண்டனம்

(கிளிநொச்சி)

சமாதானத்தை விரும்பாத சில தீய சக்திகள் எமது நாட்டில் மீண்டும் ஒரு போரையும் அழிவையும் ஏற்படுத்தி அதன் மூலம் தமது சுகபோகங்களையும், இன்பங்களையும் அதிகரித்துக் கொள்ள முயல்வதை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

வவுனியா மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

எமது நாட்டில் நீண்ட காலமாக புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்பதற்காக அரசும் விடுதலைப்புலிகளும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தைக் கைச்சாத்திட்டு நிரந்தர சமாதானத்திற்கான பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வருகின்றனர்.

சமாதானத்தை விரும்பாத சில தீயசக்திகள் இந்த நாட்டில் ஒரு போரையும், அழிவையும் ஏற்படுத்தி அதன்மூலம் தாம் சுகபோகங்களையும் இன்பங்களையும் அனுபவிக்க முயல்கின்றன.

சில பொய்யான தகவல்களையும், துண்டுப் பிரசுரங்களையும், சுவரொட்டிகளையும் பயன்படுத்தி மக்களைத் திசைதிருப்ப முயல்கின்றன.

இவ்வாறான நடவடிக்கைகள் வவுனியா நகரம், பூந்தோட்டம் சந்தி, வவுனியா மருத்துவமனை முன்பாகவுள்ள பேருந்து நிலையம் ஆகிய இடங்களில் நடைபெற்றுள்ளன.

இவ்வாறான நடவடிக்கைகளை வவுனியா மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் வன்மையாகக் கண்டிக்கிறது.

இதுபோன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களை பொதுமக்கள் இனம்கண்டு, அவர்களுக்குத் துணை போகாது விழிப்புடன் இருக்கவேண்டும் அத்துடன், இந்நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்படுவதற்கு சகல மக்களது ஒத்துழைப்பும் அவசியமெனக் கேட்டுக் கொள்வதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-08)

# கொள்ளை இலாபம் அடிக்கும்
# வியாபாரிகளால் விவசாயிகள் மனவாட்டம்

(கொடிகாமம்)

கொடிகாமம் சந்தையில், விவசாயிகளுக்குப் பெரும்அநீதி இழைக்கப்படுவதாகத் தெரியவருகிறது.

விற்பனையின் பொருட்டு இச்சந்தைக்குக் கொண்டுசெல்லப்படும் மரகறிவகைகள் மற்றும் உற்பத்திப் பொருட்களை மிகவும் குறைந்த விலையில் கொள்வனவு செய்யும் வியாபாரிகள் அவற்றை உடனடியாகவே இருமடங்கு விலையில் விற்பனை செய்கின்றனராம்.

இவ்வாறான சம்பவங்கள் தமது கண்முன்னாலேயே இடம்பெறுவதாகப் பாதிக்கப்பட்ட விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

பாடுபட்ட தாம் பாதிக்கப்பட, இடையில் வந்தவர்கள் கொள்ளை இலாபம் அடிக்கும் இச்செயலானது விவசாயிகளுக்கு இழைக்கப்படும் அநீதி எனவும் இவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அத்துடன், விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்யும்விலை, அதனை வியாபாரிகள் விற்பனை செய்யும் விலை என்பவற்றைத் தீர்மானித்துச் செயற்படும் பட்சத்தில் இவ்வாறான அநீதிகள் இடம் பெறாது எனவும்,

இதுவிடயத்தில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக்கழகம் தலையிட்டு தமக்கு ஓர் நல்ல தீர்வை பெற்றுத் தருவது அவசியமெனவும் வலியுறுத்தியுள்ளனர். (உ-87)

## தினசரி தியானம்
### ஆன்மீக வெற்றி

பேசுவதற்கு அல்லது செயற்படுவதற்குத் தொடங்கும் முன் நன்றாகச் சிந்தித்துத் தெளிவடைந்து கொள்ளுங்கள். ஆன்மீக வாழ்க்கை பற்றிய அல்லது அது தொடர்பான தகுதியுள்ள தரமான புத்தகங்களைப் படியுங்கள். இறைவனது நாமத்தையோ அல்லது புனிதமான வேறு சூத்திரத்தையோ மிகுந்த ஈடுபாட்டுடனும் மனப்பூர்வமுடனும் திரும்பத் திரும்ப ஒருமணி நேரமோ அதற்கு மேலோ சொல்ல வேண்டும் என்று உறுதி கொள்ளுங்கள். பிறரிடமிருந்து பெறுவதைக் காட்டிலும் அதிகமாகப் பிறர்க்குக் கொடுங்கள். இதுவே உங்கள் ஆன்மீக வாழ்க்கையின் வெற்றியாகும்.

சுவாமி சிவானந்தர்

## நோர்வேப் பயணம் பூர்த்தி
# அமைச்சர் சந்திரசேகரன்
# பிரான்ஸ் பயணமாகிறார்

(ஒஸ்லோ)

தனது அமைச்சின் ஊடாக சுய தொழில் மற்றும் தொழிற் பயிற்சிகளுக்கு நோர்வே தொழிற்சங்க சம்மேளனம் உதவுவதற்கு இணக்கம் தெரிவித்திருப்பதாகத் தற்போது நோர்வேயில் தங்கியுள்ள அமைச்சர் சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

ஒஸ்லோ நகரில நோர்வே தொழிற்சங்க சம்மேளனத்தின் சர்வதேச விவகார செயலாளர்நாயகம் காரின் தேர்சனை அண்மையில் சந்தித்து உரையாடிய போதுதான் விடுத்த மேற்படி வேண்டுகோள் ஏற்றுக் கொள்ளப்பட்டதாக மேலும் கூறியுள்ளார்.

இதேவேளை; அமைச்சர் பிரான்ஸ் நாட்டிற்கு விஜயம்செய்து புலம் பெயர்ந்து அங்கு வாழும் ஈழத்தமிழர்களையும், அந்நாட்டின் முக்கிய அமைச்சர்களையும், இலங்கை இனப் பிரச்சினைத் தீர்வு சம்பந்தப்பட்ட ஆர்வமுள்ளவர்களையும் சந்திக்க உள்ளதாக அமைச்சரின் ஊடகப் பிரிவினர் தெரிவித்துள்ளனர் (உ)

# நாட்டின் இரு பிரதான கட்சிகளும் ஸ்ரீ.மு.காவை விமர்சிக்கக் கூடாது

## அமைச்சர் ரவூப் ஹக்கீம் கோரிக்கை

(கொழும்பு)

இந்த நாட்டில் உள்ள பிரதான அரசியல் கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சிக்கும் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும் இடையிலான சாதகமான சூழ்நிலை உருவாக்கக் கூடிய பங்காளிக் கட்சிகளாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இயங்கி வருவதனால் அதனை விமர்சிப்பதை இவ் இரு அரசியல் கட்சிகளும் கைவிட வேண்டுமென ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூம் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

புத்தளம் மாவட்ட அரசியல் நிலை தொடர்பாகவும் பிரச்சினைகள் குறித்தும் புத்தளம் நகர சபை மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பேசும் போதே அமைச்சர் ரவூம் ஹக்கீம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் பேசுகையில், பொதுத் தேர்தலை நடத்தாமலே ஆட்சிமாற்றம் ஒன்றைக் கொண்டுவர முடியுமென்று ஆராய்ந்து வரும் இவ் வேளையில் இரு பெரும் பிரதான அரசியல் கட்சிகளும் முஸ்லிம் காங்கிரசை விமர்சிப்பதை விட்டு விட வேண்டும்.

பலவிதமான முரண்பாடுகள் நிலவுகின்ற இன்றைய சூழ்நிலையில் ஜனாதிபதியும் பிரதமரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் மேடைகளில் ஒன்றாக அமரக் கூடிய சூழ்நிலை இன்று உருவாகியுள்ளது.

எனவே வரப் போகும் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எக் கட்சியுடன் இணையப் போகிறது என்ற நிலைப்பாடு வரும்வரை முஸ்லிம் காங்கிரசை விமர்சிப்பதை இரு கட்சிகளும் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்றும் ஹக்கீம் கேட்டுக் கொண்டுள்ளார். (ம)

# பாடசாலை நிர்வாகத்துக்கு எதிராக நேற்று ஆர்ப்பாட்டம்

(புத்தளம்)

புத்தளம் மாவட்டத்தில் உள்ள தமிழ்ப் பாடசாலை ஒன்றின் நிர்வாகத்துக்கு எதிராக அப் பாடசாலையின் மாணவர்களும் பெற்றோர்களும் நேற்றுக் காலை ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடத்தினர்.

சுமார் 400 பேர் கலந்து கொண்ட இவ் ஆர்ப்பாட்ட ஊர்வலம் பண்டாரவளை ரயில் நிலையத்தில் இருந்து ஆரம்பமாகி மாவட்டக் கல்வித் திணைக்களம் வரை சென்றது.

குறிப்பிட்ட பாடசாலையில் கடமையாற்றும் 20 ஆசிரியர்கள் சுகவீன விடுமுறையில் சென்றுள்ளதால், மாணவர்களின் கல்வி பாதிக்கப்படுவதாக கூறியே இவ் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஏற்கனவே, இப் பாடசாலைகளில் நிலவும் குறைபாடுகளை நிவிர்த்தி செய்யுமாறு கோட்டக் கல்வி அதிகாரியிடம் முறைப்பாடு செய்யப்பட்ட போதிலும், அதற்கு எவ்வித நடவடிக்கையையும் மேற்கொள்ளப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (தி)

# அரசியலமைப்பு குறித்து ஆராய ஸ்ரீ.மு.கா.குழு இந்தியா பயணம்

(கொழும்பு)

இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகராலயத்தின் ஏற்பாட்டில், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உயர்மட்டக் குழுவொன்று இம் மாத பிற்பகுதியில் இந்தியாவுக்கான உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளது.

இந்தியாவில் பல்லின மக்கள் வாழும் அசாம், பாண்டிச்சேரி மற்றும் லடாக் ஆகிய மாநிலங்களுக்கு விஜயம் செய்யவுள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அரசியலமைப்பு விவகாரக் குழுவினர் மேற்படி மாநிலங்களிலுள்ள அரசியலமைப்பு மற்றும் நிர்வாகச் செயற்பாடுகள் பற்றி விரிவாக ஆராயவுள்ளதாகத் தெரியவருகிறது.

அதே சமயம், இலங்கை முஸ்லிம்களின் பிரச்சினைகளையும் தேவைகளையும் சர்வதேச மயப்படுத்தும் திட்டத்தின் கீழ் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகரை ஏற்கனவே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சந்தித்துக் கலந்துரையாடியமை குறிப்பிடத்தக்கது. (உ-8,18)

# கிணற்றில் வீழ்ந்து குழந்தை மரணம்

(யாழ்ப்பாணம்)

வீட்டு முற்றத்தில் விளையாடிக் கொண்டிருந்த வேளையில் தவறுதலாக கிணற்றினுள் வீழ்ந்த ஒரு வயதை நிரம்பிய ஆண் குழந்தை ஒன்று பரிதாபகரமாக உயிரிழந்துள்ளது.

இத் துயரச் சம்பவம் நேற்று முன்தினம் முற்பகல் 11 மணியளவில் மடத்தடி தண்ணீர்த் தாங்கிக்கு அருகில் உள்ள வீடொன்றில் இடம் பெற்றுள்ளது.

சம்பவத்தில் தெய்வேந்திரராசா தற்சுதன் என்ற ஒரு வயதுக் குழந்தையே இவ்வாறு மரணமடைந்துள்ளது.

சம்பவம் இடம் பெற்ற வீட்டிற்கும் கிணற்றுக்கும் இடையில் மிகக் குறுகிய தூரமே காணப்படுவதால் முற்றத்தில் விளையாடிக் கொண்டிருந்த சமயம் குழந்தை கிணற்றினுள் வீழ்ந்துள்ளது. (உ-7)

# தெல்லிப்பளைக் கோட்டத்தில் உதைப்பந்தாட்டப் போட்டி

தெல்லிபளைக் ஷோட்டப் பாடசாலைகளுக்கிடையில் இடம் பெற்று வரும் உதைபந்தாட்டப் போட்டிகள் நாளை காலை 8.30மணிக்கு ஆரம்பமாகவுள்ளன.

யா/அருணோதயாக் கல்லூரி, யா/மகாஜனாக் கல்லூரி மைதானங்களில் மோதவுள்ள அணிகளில் விபரம் முறையே,

16வயதின் கீழ்ப்பிரிவு;மகாஜனக் கல்லூரி எதிர் யா/குட்டியப்புலம் மாக வித்தி.மல்லாகம் மகா வித்தி எதிர் யா/குளமங்கால் ஆர்.சி.வித்து, யா/அருணாசலம் வித்தி. எதிர் யா/வசாவிளான் மகா வித்தி.யா/அருணோதயாக் கல்லூரி எதிர் கட்டுவன் மாக வித்தி,

18. வயதின் கீழ்ப் பிரிவு; யா/மல்லாகம் மாக வித்தி. எதிர் யா/குளமங்கால் ஆர்.சி-.வித்தி. யா/அருணோதயாக் கல்லூரி எதிர் யா/வசாவிளாழன் மாக வித்தி, யா/யூனியன் கல்லூரி எதிர் யா/இளவாலை மெய்கண்டான் வித்தி. (உ)

## கண்காணிப்புக்....

முடியாது உள்ளதாகவும் அவரைச் சந்தித்தபின்னரே இது குறித்த விளக்கத்தைக் கூறமுடியும் என்றும் அரசியல்துறைப் பொறுப்பாளர் திலக் தெரிவித்ததாக யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்கு குழுவின் பேச்சாளர் அகனிஸ் பிரகாரொட்டி தெரிவித்துள்ளார். (தி)

## பயிற்சி....

டாளர்கள் மறுப்புத் தெரிவித்தனர் இதனால் படைத்தரப்பினர் யாழ் கண்காணிப்புக் குழுவினருக்கு அறிவித்ததையடுத்து, கண்காணிப்புக் குழுப்பிரதிநிதிகளும் சம்பவ இடத்திற்கு வந்து நிலைமையை அவதானித்தனர்.

நிகழ்வு குறித்து விழா ஏற்பாட்டாளர்கள் விளக்கமளித்ததையடுத்து படையினர் அவ்விடத்தை விட்டு அகன்று சென்றனர். (இ)

## மட்டக்களப்பில் நேற்று....

மணிகள் ஒலிக்கப்பட்டு விசேட பூசை வழிபாடுகளும் இடம்பெற்றன மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

1990ம் ஆண்டு கிழக்குப்

# பிரதேச செய்தியாளர் பதவி வெற்றிடம்

பின்வரும் இடங்களில் பிரதேச செய்தியாளர்களாக கடமையாற்றுவதற்கான விண்ணப்பம் ஆண்களிடம் இருந்து கோரப்படுகின்றது.

★தெல்லிப்பழை ★கந்தர்மடம்
★மருதனார்மடம் ★அரியாலை

றில் இடம் பெற்றுள்ளது.

சம்பவத்தில் தெய்வேந்திரராசா தற்சுதன் என்ற ஒரு வயதுக் குழந்தையே இவ்வாறு மரணமடைந்துள்ளது.

சம்பவம் இடம் பெற்ற வீட்டிற்கும் கிணற்றுக்கும் இடையில் மிகக்

வரும் உதைபந்தாட்டப் போட்டிகள் நாளை காலை 8.30மணிக்கு ஆரம்பமாகவுள்ளன.

யா/அருணோதயாக் கல்லூரி, யா/மகாஜனாக் கல்லூரி மைதானங்களில் மோதவுள்ள அணிகளில் விபரம் முறையே,

16வயதின் கீழ்ப்பிரிவு;மகாஜனக் யா/அருணாசலம் வித்தி. எதிர் யா/வசாவிளான் மகா வித்தி.யா/அருணோதயாக் கல்லூரி எதிர் கட்டுவன் மாக வித்தி.

18 வயதின் கீழ்ப் பிரிவு; யா/மல்லாகம் மாக வித்தி. எதிர் யா/குளமங்கால் ஆர்.சி-.வித்தி. யா/அருணோதயாக் கல்லூரி எதிர் யா/வசாவிளான் மாக வித்தி, யா/யூனியன் கல்லூரி எதிர் யா/இளவாலை மெய்கண்டான் வித்தி. (உ)

ரொட்டி தெரிவித்துள்ளார். (தி)

அகன்று சென்றனர். (இ)

## மட்டக்களப்பில் நேற்று....

மணிகள் ஒலிக்கப்பட்டு விசேட பூசை வழிபாடுகளும் இடம்பெற்றன

கடைகள் வாகனங்கள் மற்றும் பொது இடங்களில் கறுப்புக் கொடிகள் கட்டப்பட்டு துக்க தினம் அனுஷ்டிக்கப்பட்டது. ஒலிபெருக்கியில் சோக கீதம் ஒலிக்கவிடப்பட்டது.

துக்கதினத்தை அனுஷடிக்கும் பிரதான வைபவம் கிழக்கு பல்கலைக்கழக முன்றலில் பாரளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் 5ஆயிரத்துக்கு மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

1990ம் ஆண்டு கிழக்குப் பல்கலைக்கழக அகதி முகாமிலிருந்து 158க்கு மேற்பட்ட தமிழர்கள் படையினரால் கைது செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்டனர்.

இதன் நினைவாகவே இவ் வைபவம் கிழக்கு பல்கலைக் கழகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டது. நிகழ்வில் நினைவுத் தூபி ஒன்றை நிறுவுவதற்கான அடிக்கல்லும் நாட்டப்பட்டது. (த)

## சமாதான

சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஸ்தம்பித நிலை அடைந்துள்ளன. இந்நிலையில் சமாதானப் பேச்சுவார்த்தைகள் சீர்குலைந்து போகுமானால் மீண்டும் யுத்தம் வெடிக்கும் என்பதில் ஐயம் இல்லை. யுத்தம் ஆரம்பிக்கப்படுமானால் அபிவிருத்திப் பணிகள் யாவும் முற்றாக ஸ்தம்பிதம் அடைந்து விடும் இதனால் சமாதான நடவடிக்கைகளை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்ல முழு அளவில் அரசாங்கம் முயற்சி செய்து வருகிறது.

விடுதலைப் புலிகளிடம் கையளித்துள்ள இடைக்கால நிர்வாக சபை திட்ட வரைபுக்கு அவர்கள் பரிஸில் தயாரித்த பதில் திட்ட வரைபு அரசாங்கத்தின் கையில் கிடைத்தவுடன் அதனைப் பரிசீலனை செய்தபின்னர் சமாதானப் பேச்சுவார்த்தையை மீண்டும் ஆரம்பிப்பதா என்ற முடிவு எடுக்கப்படும் என்றும் பிரதமர் ரணில் தெரிவித்துள்ளார். (ம)


MEDICAL CHECK UP

வைத்திய பரிசோதனை

நோய் வருமுன் காப்போம்

திடீர் மரணத்தைத் தவிர்ப்போம்

- 40 வயதிற்கு மேற்பட்ட நோய் உள்ள, நோய் அற்ற அனைவரும் இந்த MEDICAL CHECK UP ஐச் செய்வதன் மூலம் நோயற்ற சுகவாழ்வு வாழலாம்
- X-RAY- ECG, சில முக்கிய இரத்தப் பரிசோதனைகள் சிறுநீர்ப் பரிசோதனை.

இலவச வைத்திய ஆலோசனையுடன் கூடிய MEDICAL CHECK UP குறைந்த கட்டணத்தில்! விபரங்களுக்கு நேரில்!

போக்குவரத்து வசதி கருதி

சம்பந்தர் மொடேர்ன் கிளினிக்

(அமுல் கிறீம் ஹவுஸ் அருகில்)

ஆஸ்பததிரி வீதி, யாழப்பாணம்.


## ஈழத்து கூத்து விழா

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றம் நடாத்தும் ஈழத்து கூத்துவிழா எதிர்வரும் 11ந் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து நான்கு தினங்கள் நடைபெறவுள்ளது.

மறைக்கல்வி நடுநிலைய மண்டபத்தில் நான்கு தினங்களும் தினமும் மு.ப.9மணிக்கு ஆரம்பமாகி மாலை 5 மணிவரையும் திருமறைக் கலாமன்ற அரங்கில் மாலை 6.45 மணிக்கும் ஆரம்பமாகி நடைபெறும்.

ஈழத்தின் கூத்து மரபுகளை அறிக்கை செய்தல், தேசிய அரங்கை நோக்கிய தேடலை ஏற்படுத்துதல் எனும் நோக்கங்களோடு ஆற்றுகை செய்யப்படவுள்ள மேற்படி ஈழத்துக் கூத்து விழாவில், யாழ்ப்பாணம், மன்னார், மட்டக்களப்பு, வன்னி மற்றும் மலையகம் ஆகிய பிதேசங்களைச் சேர்ந்த கலைஞர்கள் ஆற்றுகை செய்யவுள்ளனர். (த)

## பாதுகாப்பு...

தேசிய முன்னணி அரசாங்கத்தைப் பதவியில் இருந்து தூக்கி எறிய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது.

புதிய அரசாங்கத்தை அமைத்து நாட்டின் இறைமையையும் தன்மானத்தையும் காக்கதேசாபிமானம் உள்ள மக்கள் அனைவரும் ஓரணியாகத் திரள வேண்டும்.

அதேவேளை நாட்டின் இறைமைக்கும் பாதுகாப்புக்கும் பாரிய அச்சுறுத்தல் தற்போது விடுக்கப்பட்டு வருவதால் சபாநாயகர் உடனடியாகப் பாராளுமன்றத்தைக் கூட்டி நிலைமைகளை ஆராய வேண்டும்.

அத்துடன் நாட்டின் பாதுகாப்புக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல் தொடர்பாக பிரதமர் விளக்கம் அளிக்க வேண்டும்எனவும் சரத் அமுனுகம வேண்டுகோள் விடுத்துள்ளார். (த)


பிரதேச செய்தியாளர் பதவி வெற்றிடம்

பின்வரும் இடங்களில் பிரதேச செய்தியாளர்களாக கடமையாற்றுவதற்கான விண்ணப்பம் ஆண்களிடம் இருந்து கோரப்படுகின்றது.

★தெல்லிப்பழை ★கந்தர்மடம்
★மருதனார்மடம் ★அரியாலை
★உரும்பிராய் ★நாயன்மார்கட்டு
★கோண்டாவில்
★திருநெல்வேலி
★நல்லூர்

இப்பதவிக்கு க.பொ.த சாதாரண தரத்தில் ஆறு பாடங்களில் சித்தி அடைந்தவர்கள் விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பிப்பவர்கள் தங்களது முழுப் பெயர், முகவரி, பிறந்த திகதி, கல்வித் தகைமை, தொழில், தொழில் புரியும் இடம் என்பன உள்ளடங்கியதாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை;

பிரதம ஆசிரியர்,
வலம்புரி
இல.15, வெள்ளாந்தெரு
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு இம் மாதம் 10-ந் திகதிக்கு முன் அனுப்பி வைக்கவும்.

குறிப்பு : வ்யதெல்லை வரையறுக்கப்படவில்லை.

வலம்புரி ஆளணி முகாமையாளர்


## மரண அறிவித்தல்

### கிங்ஸ்லி ஜேம்ஸ் (இந்திரன்)

யாழ்ப்பாணம் கோவில் வீதியைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட கிங்ஸ்லி ஜேம்ஸ் (இந்திரன்) 03.09.2003 புதன் கிழமை அன்று பிரான்சில் காலமானார்.

அன்னார் காலம் சென்ற ஜேம்ஸ் தம்பதியின் மகனும் தனசிங்கம் தம்பதியினரின் மருமகனும், ராஜியின் அன்புக் கணவரும் குளொறறி, நிலானி, ஜொனததன் ஆகியோரின் அருமைத் தந்தையும் வசந்தி, சந்திரன், லலி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ராஜன், ராஜூவின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் லண்டனில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

தகவல்
திரு ஜி.கே.தனசிங்கம்
மாமனார்

859/24 ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்
தொ.பே.இல. 021-2225643

[7595]


இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.09.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.